பக்கங்கள்: பதினான்கு

Registere^d as a Newsp

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 21 திங்கட்கிழமை (04.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 159

# விடுதலைப் புலி உறுப்பினர்கள் சரண் அடைந்தால் மன்னிப்பு

## அரசு ஆராய்வதாக அமைச்சர் தகவல்

கொழும்பு, மே4

ஆயுதங்களைக் கீழே வைத்துச் சரண் அடையும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்குப் பொது மன்னிப்பு அளிப்பது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

அதற்கான நடைமுறை விதிகளை சட்டமா அதிபர் திணைக்களம் இப்போது தீவிரமாக ஆராய்ந்து வருவதாக மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு எந்தக் கட்டத்திலும் மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது. நாட்டின் சட்டங்களுக்கு ஏற்ப அவர்கள் கையாளப்படுவார்கள் என்றும் அமைச்சர் திட்டவட்டமாகக் கூறியதாக ஏ.பி. செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மே4

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும் என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் நேற்றிரவு தெரிவித்தது.

(விவரமான செய்தி 5 ஆம் பக்கத்தில்)

## நலன்புரி நிலையங்களில் சந்திக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே4

வன்னியிலிருந்து குடாநாட்டுக்கு இடம்பெயர்ந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களை அவர்களது உறவினர்கள் வாரத்தில் இரு தடவைகள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதி வைத்தியசாலையில்!

சென்னை, மே4

முதல்வர் கருணாநிதி உடல்நலக் குறைவு காரணமாக சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் 6 பக்கங்கள் கொண்ட இலவச கல்விச்சுடர் இணைப்பிதழ் நாளை

# ஐ.நாவின் செய்மதிப் படங்களால் இலங்கை அரசுக்கு புதிய தலையிடி!

கொழும்பு, மே4

வன்னியில் பாதுகாப்பு வலயம் மீது கனரக ஆயுத மற்றும் விமானத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றமையை வெளிப்படுத்தும் வகையில் செய்மதி மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டிருக்கின்றமையால், இலங்கை அரசு புதிய தலையிடியைச் சந்திக்க நேர்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் செய்மதிப்படங்களைத் துருவித்துருவி ஆராய்ந்து கொண்டிருக்கின்ற மேற்குலகம், அவற்றை வைத்து இலங்கை அரசு மீதான தனது அழுத்தங் களை அதிகரிப்பதற்குத் திட்டமிடுகின்றது என்றும், அந்த நெருக்கடிகளை எதிர்கொண்டு சமாளிப்பதற்கு இலங்கை அரசுத் தரப்பில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இந்தச் செய்மதிப் படங்கள் வெளியாகியுள்ளமையைத் தொடர்ந்து இலங்கை விவகாரத்தை பாதுகாப்புச் சபைக்குக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை 4.5 கி.மீ. கரையோரத்தில் முடக்கி விட்டதாகக் கூறுகிறது இராணுவம்

கொழும்பு, மே4

முல்லைத்தீவில் பாதுகாப்பு வலயத்தில் நேற்று மோதல்கள் தொடர்ந்து நடைபெற்றதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்றைய மோதல்களின் போது 500 மீற்றர் நீளமான விடுதலைப் புலிகளின் மண் அணைகளை இராணுவத்தினர் கைப்பற்றியதாகவும் அதன் பின்னர் தொடர்ந்தும் சண்டை நடைபெறுவதாகவும் அவர் மேலும் கூறினார். எனினும் சண்டையின் போது ஏற்பட்ட சேதங்கள் குறித்து அவர் விவரம் எதனையும் தெரிவிக்கவில்லை.

ஆகப் பிந்திய நிலையில் விடுதலைப் புலிகள் நாலரைக் கிலோ மீற்றர் கடற்கரைப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான ஐ.நா. தூதுவர் புஹுனேயை நாட்டை விட்டு வெளியேற்ற அரசு திட்டம்?



கொழும்பு, மே4

இலங்கைக்கான ஐ.நா.தூதர் நெய்ல் புஹுனேயை நாட்டைவிட்டு வெளி யேற்ற அரசு திட்டமிட்டிருப்பதாகத் தகவல் கள் வெளியாகியிருக்கின்றன.

வன்னியில் தொடரும் போரில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களைக் கொழும்பில் உள்ள ஐ.நா. தூதரகமே திட்டமிட்ட முறையில் ஊடகங்களுக்கு கசியவிட்டதாக, அரசு மேற்கொண்ட விசாரணைகளின்போது தெரியவந்ததையடுத்தே அவரை நாட்டை விட்டு வெளியேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சரியானவை என உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எனக் குறிப்பிடப்பட்டு, கொல்லப்பட்ட பொது மக்களின் எண்ணிக்கைகள் அடங்கிய ஆவணம் ஒன்று கொழும்பில் உள்ள மேற்குலக நாடுகளின் தூதரகங்களுக்கு முதலில் விநியோகிக்கப்பட்டது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா அகதிகள் குறித்து கலந்துரையாட தமிழ்க் கட்சிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு, மே4

வவுனியா அகதிமுகாம்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்தோரின் நிலை தொடர்பாகக் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் கட்சிகள் அனைத்துக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

இச்சந்திப்பு நாளை பிற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அலரிமாளிகை வட்டாரம் தெரிவித்துள்ளது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளைப் பராமரிப்பது குறித்து இலங்கைக்கு ஐ.நா. விளக்கம்

### அதனைக் கட்டாயமாக அமுல்படுத்த வலியுறுத்து

கொழும்பு, மே4

மோதல்கள் காரணமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் விடயங்களைக் கையாளும்போது இலங்கை அரசு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் சிலவற்றை முன்வைத்துள்ள ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச ஒத்துழைப்புக் கிடைப்பதற்கு அரசு அவற்றைச் கட்டாயமாக நடைமுறைப்படுத்தவேண்டுமென தெரிவித்துள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பிரதம அதிகாரி வால்டெர் கலின் இதனை அரசிடம் கையளித்துள்ளார்.

'கலின் திட்டம்' என அழைக்கப்படும் இந்த வழிகாட்டுதல்களில், மோதலில் சிக்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களின் பாதுகாப்பு குறித்து அதிகளவு கவனம் செலுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச விதிமுறைகளுக்கு ஏற்ப சில

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களின் உண்மை நிலைமையை மதிப்பிட சர்வதேச கண்காணிப்புக் குழுவை அனுப்பக் கோரிக்கை

கொழும்பு, மே 4

வன்னியில் பாதுகாப்பு வலயத்தில் சிக்குண்டுள்ள மக்களின் நிலைமையை நேரில் மதிப்பிடுவதற்காக சர்வதேச கண்காணிப்புக் குழுவொன்றை அனுப்புமாறு பிரிட்டிஷ், பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர்களிடம் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர்களுக்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு முன்னெடுக்கும் இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு அழுத்தம் கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் இக்கடிதத்தில் நடேசன் வலியுறுத்தியுள்ளார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களை வாரத்தில் இருதடவைகள் உறவினர்கள் சந்திக்க ஏற்பாடு

## அரச அதிபர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 4

* வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களை அவர்களது உறவினர்கள் வாரத்தில் இரு தடவைகள் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

-இரண்டு உறவினர்கள் முப்பது நிமிட நேரம் அவர்களுடன் உரையாட அனுமதி வழங்கப்படும்.

* நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களுடன் புதன், சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் முற்பகல் 10மணி முதல் பிற்பகல் 4மணி வரை தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

* கொடிகாமம், கோப்பாய் பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்களில் உள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை 11.05.2009ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

* தெல்லிப்பழையில் உள்ள புனர்வாழ்வு நிலையத்தில் தங்கியுள்ளவர்களை அவர்களது உறவினர்கள் மாதத்தில் இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் சந்திக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களின் நிலைமை தொடர்பாக யாழ். அரச அதிபர் கே.கணேஸ் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்ட தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங் களில் இருந்து 3825 குடும்பங்களைச் சேர்ந்த 11079 பேர் யாழ்ப்பாணம் வந்தடைந்துள்ளனர். இவர்கள் கீழ் குறிப்பிடப்படும் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

| # | நலன்புரி நிலையத்தின் பெயர் | குடும்பம் | அங்கத்தவர் |
|---|---|---|---|
| 1 | திருநகர் நலன்புரி நிலையம் | 30 | 72 |
| 2 | கோப்பாய் நலன்புரி நிலையம் | 200 | 483 |
| 3 | மிருசுவில் RCTMS நலன்புரி நிலையம் | 580 | 1773 |
| 4 | கொடிகாமம் GTMS நலன்புரி நிலையம் | 306 | 1004 |
| 5 | கைதடி சைவச் சிறுவர் இல்ல நலன்புரி நிலையம் | 76 | 214 |
| 6 | கைதடி பல்கலைக்கழக விடுதி நலன்புரி நிலையம் | 420 | 1101 |
| 7 | கைதடி PRI-A நலன்புரி நிலையம் | 247 | 715 |
| 8 | கைதடி PRI-B நலன்புரி நிலையம் | 213 | 626 |
| 9 | சாவகச்சேரி இந்துக் கல்லூரி நலன்புரி நிலையம் | 431 | 1270 |
| 10 | கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய நலன்புரி நிலையம் | 389 | 1176 |
| 11 | சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி நலன்புரி நிலையம் | 460 | 1395 |
| 12 | நெல்லியடி மத்திய மகா வித்தி[illegible]ய நலன்புரி நிலையம் | 473 | 1250 |
| | மொத்தம் | 3825 | 11079 |

### உணவு, உணவற்ற தேவைகள்

இவர்களுக்குத் தேவையான மூன்று வேளை சமைத்த உணவு, அடிப்படைத் தேவைகள் யாவும் மாவட்டச் செயலகத்தாலும் தொடர்புடைய பிரதேச செயலகங்களாலும் வழங்கப்படுகின்றன. தற்போது உணவு வழங்கும் நடவடிக்கைக்குத் தேவையான உப உணவுப் பொருள் வழங்குவதில் கியூடெக் கரித்தாஸ் நிறுவனமும், சேவாலங்கா நிறுவனமும் இணைந்துள்ளன.

தேவையான அடிப்படை வசதிகள்யாவும் அடையாளம் காணப்பட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் இயன்ற அளவு திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### நீர் விநியோகம்

யுனிசெவ், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, பிரதேச சபைகள் ஊடாக இச் சேவை மேற்கொள்ளப்படுகின்றது.

### வைத்திய வசதிகள்

சகல நலன்புரி நிலைங்களுக்குமான வைத்திய சேவைகள், அம்புலன்ஸ் வசதிகள், சுகாதார சேவைகள் மேற்பார்வை என்பன பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரது மேற்பார்வையில் வழங்கப்படுகின்றன.

### கல்வி

கோப்பாய், கொடிகாமம் ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட் டுள்ளதுடன் சீருடைகளும் தைத்து வழங்கப்பட்டுள்ளன. மிருசுவில், கைதடியில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மாணவர்களது கல்வி நடவடிக்கைக்காக புதிய கட்டடம் அமைக்கப்பட்டு 11.05.2009ஆம் திகதி தொட்க்கம் பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் கல்வித் திணைக்களத்தாலும் யுனிசெவ் நிறுவனத்தாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### அரச உத்தியோகத்தர்கள், ஓய்வூதியம் பெறுவோர்

இடம்பெயர்ந்துள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் தங்களது சேவை தொடர்பான தகவல்களைத் தொடர்புடைய திணைக்களங்களுக்குத் தெரியப்படுத்தி அவர்களை யாழ். மாவட்டத்தில் இணைப்புச் செய்து சம்பளம் பெறுவதற் கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட் டுள்ளது. ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதியம் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மாதாந்த பொதுசன உதவிப் பணம் பெறுவோர் கொடுப்பனவு செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### வங்கி நடவடிக்கை

நலன்புரி நிலையங்களில் உள்ள மக்கள் தமது வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக வங்கிகள் நலன்புரி நிலையத்தில் நடமாடும் சேவையை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

### வயது முதிர்ந்தோர், சிறுவர் விடுவிப்பு, குடும்ப இணைப்பு

60வயதிற்கு மேற்பட்டோரை விடுவிக்கும் நடவடிக்கையின் முதற்கட்டமாக 22முதியவர்கள் தமது உறவினர்களுடன் சென்று தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் சிறுவர்கள், அங்கவீனர்கள், சுகவீனமுற்ற 23 பேர் நலன்புரி நிலையத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன் குழந்தை பிரசவிக்கும் தாய்மார்கள் பிரசவத்தின் பின் தற்காலிகமாக தமது உறவினர்களுடன் தங்கியிருப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. நலன்புரி நிலையங்களுக்கு இடையே பிரிந்து வாழ்ந்த 77 குடும்பங்களைச் சேர்ந்த 167 பேர் இது வரை ஒன்று சேர்க்கப்பட்டுள்ளனர்.

### உறவினர்களைச் சந்தித்தல்

நலன்புரி நிலையத்தில் உள்ள மக்களை இரண்டு உறவினர்கள் வாரத்தில் இரண்டு தடவைகள் முப்பது நிமிட நேரம் சந்திப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. உறவுகளைச் சந்திக்க வருபவர்கள் சமைத்த உணவு, கையடக்கத் தொலைபேசி, புகைப்படப் பிடிப்புக் கருவி என்பன எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் சந்திக்க வருபவர்கள் தமது அடையாள அட்டையை எடுத்துச் செல்வது இன்றியமையாததாகும்.

### தொலைபேசி, தபால் வசதிகள்

கீழ் குறிப்பிடப்படும் நலன்புரி நிலையத்தில் உள்ள மக்களுடன் தொடர்பு கொள்வதற்கான தெலைபேசி வசதிகள்

| # | நலன்புரி நிலையத்தின் பெயர் |
|---|---|
| 1 | திருநகர் நலன்புரி நிலையம் |
| 2 | கோப்பாய் நலன்புரி நிலையம் |
| 3 | மிருசுவில் RCTMS நலன்புரி நிலையம் |
| 4 | கொடிகாமம் GTMS நலன்புரி நிலையம் |
| 5 | கைதடி சைவச் சிறுவர் இல்ல நலன்புரி நிலையம் |
| 6 | கைதடி பல்கலைக்கழக விடுதி நலன்புரி நிலையம் |
| 7 | கைதடி PRI-A நலன்புரி நிலையம் |
| 8 | கைதடி PRI-B நலன்புரி நிலையம் |

செய்து கொடுக்கப்பட்டுள்ளன. புதன், சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை தொடர்புகளை ஏற்படுத்த முடியும். தொடர்பு கொள்பவர்களது விவரங்களைப் பதிவு செய்தல் வேண்டும் என்பதால் தொடர்பு கொள்ளும் போது நலன்புரி நிலைய பொறுப்பதிகாரியால் கோரப்படும் விவரங்களை வழங்குதல் வேண்டும். தபால் போக்குவரத்துக்கான வசதிகளும் தபால்த் திணைக்களத்தால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

### இடம்பெயர்ந்தோர் தங்கவைக்கப்பட்டுள்ள பாடசாலைகள்

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் என்பவற்றில் தற்போது இடம் பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களை மிக விரைவாக நலன்புரி நிலையங்களிற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் முதற்கட்டமாக கொடிகாமத்தில் அமைக்கப்பட்டு வரும் நலன்புரி நிலையத்திற்கு மே மாதம் 15ஆம் திகதியளவில் ஒரு தொகுதி மக்கள் மாற்றம் செய்யப்படவுள்ளனர். இந்த நலன்புரி நிலையம் அமைக்கும் பணியில் Danish De-mining Group, UNHCR, UNICEF, ICRC என்பன தமது பங்களிப்பை உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக மேற்கொண்டுவருகின்றன.

### அரசசார்பற்ற நிறுவனங்கள்

கீழ் குறிப்பிடப்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது பங்களிப்பினை நேரடியாக நலன்புரி நிலையங்களிற்கு சென்று வழங்குவதற்கு 02.05.2009 ஆம் திகதி பாதுகாப்புப்படைத் தலைமை அதிகாரியுடனான கலந்துரையாடலின்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

CARE, HUDEC - Caritas ,Christian AID, DRC, FORUT, MSF, World Vision, WUSC, ZOA.

### புனர்வாழ்வு நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோர்

நலன்புரி நிலையங்களிலிருந்து 76 பேர் அவர்களது சம்மதத்தின் பேரில் தெல்லிப்பழையிலுள்ள புனர்வாழ்வு நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களது உறவினர்கள் மாதத்தில் இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் சந்திப்பதற்கு மாவட்டச் செயலகத்தினால் உரிய அதிகாரிகளின் சம்மதத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்று ஞாயிற்றுக் கிழமை (03.05.2009) சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

அண்மையில் யாழ் மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களுக்கு உதவி வழங்க விரும்புகின்ற நிறுவனங்கள் தாங்கள் ஆற்ற இருக்கும் பணி சம்பந்தமாக முன்னறிவித்தலை வழங்குவதுடன் நிவாரணம் வழங்குவதற்கான நிதி சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு முன் இந்த அறிவிப்பினை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். நிவாரணம் தொடர்பான பணியை மேற்கொள்ள விரும்புகின்ற நிறுவனங்கள் மாவட்டச் செயலகம், மாவட்ட புனர்வாழ்வுச் செயலகம் ஆகியவற்றுடன் கீழ் குறிப்பிடப்படும் இலக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தலாம்.

மாவட்டச் செயலகம் -021 222 2233, 021 222 2234,021 222 2235 (நேரடி)

மாவட்ட புனர்வாழ்வுச் செயலகம் -021 222 2774, 021 222 9034

யாழ்.மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டி ருக்கும் மக்களை திருப்திகரமான முறையில் பராமரிப்பதற்கு உதவி புரிந்து வருகின்ற சகல ஐ.நா. நிறுவனங்களுக் கும் அரச, அரசார்பற்ற, சமய நிறுவனங்களுக்கும் மாவட்டச்செயலகம் மக்கள் சார்பில் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது - என்றுள்ளது.

## 'நண்பர்கள்' விளையாட்டு சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், மே 4

யாழ்.பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சிமைய மாணவர்களின் 'நண்பர்கள்' எனும் விளையாட்டு சஞ்சிகையின் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் பணிப்பாளருமான பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொண்டு சஞ்சிகையை வெளியிட்டு வைக்கவுள்ளார். முதற்பிரதியை யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எஃப்.ஜே.ரூபசிங்கம் பெறவுள்ளார்.

இச் சஞ்சிகையின் ஆய்வுரையை ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மைய விரிவுரையாளர் ம.ஜனகேஸ்வரன் நிகழ்த்துவார்.

(1-06)

## உறவுகளைச் சந்திக்க வடமராட்சியில் அனுமதி

வன்னியில் இருந்து வந்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தங்கியிருப்பவர்களை அவர்களது உறவினர்கள் சந்திக்க நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கப்பட்டது.

ஒரு வாரகாலமாக அங்கு தங்கியிருந்த போதும் நேற்று முன்தினமே அவர்களை உறவினர்கள் சந்திக்கப் படையினர் அனுமதி வழங்கினர்.

முற்பகல் 9மணி முதல் பிற்பகல் 5மணி வரை இந்த வசதி செய்யப்பட்டிருந் தது.

பெரும் எண்[illegible] அங்கு சென்று தமது [illegible] மல்க உரையாடினர்.

(1-70)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இலங்கைத் தமிழர்களைக் கைவிட்ட கட்சிகளுக்குத் தேர்தலில் உரிய பாடம்?

இலங்கைத் தமிழர்களைக் கைவிட்ட தரப்புகளுக்குத் தமிழகத்தில் உரிய பாடம் புகட்டுவோம் என்ற எழுச்சியுடன் புறப்பட்டிருக்கின்றது தமிழக சினிமாத்துறை.

இந்திய அரசியலில் - குறிப்பாகத் தமிழக அரசியலில் மிகவும் செல்வாக்குச் செலுத்தும் சக்தியாக விளங்கி வருவது சினிமா.

தமிழகத்தில் அகில இந்திய காங்கிரஸின் ஏகோபித்த ஆட்சியுரிமையை அடியோடு வீழ்த்தி அதனைக் கைப்பற்றி, நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அதனைத் தக்க வைத்திருக்கும் திராவிடக் கட்சிகள் இரண்டுமே - தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. இரண்டுமே - திரையுலக செல்வாக்கை வைத்தே மக்கள் மத்தியில் ஊடுருவி வளர்ந்து தம்மை நிலைநிறுத்திக் கொண்டன என்பது எல்லோருக்கும் புரிந்த விடயம்.

அவ்வாறு தமது பிரபலம் மூலம் அரசியலில் அதிக செல்வாக்குச் செலுத்தும் திறமையும், தகைமையும் கொண்ட தமிழ்த் திரையுலகத்தினரே இப்போது இலங்கைத் தமிழர்களைக் கைவிட்ட தரப்புகளுக்கு எதிராகக் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் இறங்கியிருக்கின்றனர்.

தமிழக சினிமாத்துறையின் மூத்த இயக்குநர் பாரதிராஜா தலைமையில் பல திரையுலகப் பிரமுகர்களும் இன்று முதல் தமிழகத்தின் முக்கிய தொகுதிகளில் தங்கள் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர். பிரதான தொகுதிகளில் ஒன்று கூடி பிரசாரக் கூட்டங்களை முன்னெடுக்கும் அவர்கள், இலங்கைத் தமிழர்களைக் கைவிட்ட தரப்பினரை நடக்கப்போகும் தேர்தலில் தோற்கடித்து அவர்களைத் தமிழகத்திலிருந்து விரட்டியடிக்க வேண்டும் எனப் பொதுமக்களிடம் பகிரங்கமாகக் கோருவார்கள் என்று அறிவிக்கப்படுகின்றது.

திரையுலகினர் ஒரே மேடையில் தோன்றும் பொதுக் கூட்டங்களுக்கு பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் திரண்டு வருகின்றமை வழக்கம். திரையுலகினர் ஒரு தரப்பை இலக்கு வைத்து அம்பலப்படுத்த முயல்வது அத்தரப்பினருக்கு பேரிடியாகவும், வரும் தேர்தலில் பேரடியாகவும் அமையும் என்று ஆரூடங்கள் கூறப்படுகின்றன.

இலங்கைத் தமிழர்களை நட்டாற்றில் விட்ட பிரதான தரப்பாகத் தமிழகத்தில் குற்றம் சுமத்தப்படுவது காங்கிரஸ் கட்சி மீதுதான். இம்முறையும் தி.மு.கவுடன் கூட்டணி அமைத்துள்ள காங்கிரஸ், தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள நாற்பது மக்களவைத் தொகுதிகளில் பதினாறில் போட்டியிடுகின்றது.

இலங்கைத் தமிழர்களைக் கைவிட்டு, காட்டிக் கொடுத்த குற்றத்துக்காக அந்தப் பதினாறு தொகுதிகளிலும் அக்கட்சியை மண் கவ்வ வைத்து நல்ல பாடம் புகட்ட வேண்டும் எனத் துடியாத் துடிக்கின்றது தமிழகத் திரையுலகம்.

இந்தியத் தேர்தலுக்கான பிரசாரம் இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கின்றது. பிரசார நடவடிக்கைகள் இன்னும் ஒரு வாரத்தில் ஓய்வுக்கு வரப் போகின்றன. இந்த ஒரு வாரமும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் போட்டியிடும் தொகுதிகளிலேயே தனது எதிர்ப் பிரசார நடவடிக்கைகளை முறுக்கி விட - முடுக்கி விட - தீர்மானித்திருக்கின்றது தமிழகத் திரையுலகம்.

காங்கிரஸோடு சேர்ந்து, பதவிச் சுகத்துக்காக இலங்கைத் தமிழர்களின் நலனைப் புறமொதுக்கி நடந்து கொண்ட தி.மு.கவும், ஈழத் தமிழருக்கு ஆதரவாகத் தமிழகத்தில் கிளர்ந்துள்ள அரசியல் சூறாவளியில் சிக்கி சின்னாபின்னமாகப் போவது உறுதி என்கின்றன தமிழகச் செய்திகள்.

இந்தியப் பொதுத் தேர்தல் அறிவிக்கப்படும் வரை கடந்த ஐந்து வருடங்களாக காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணியில் இருந்ததுதான் பாட்டாளி மக்கள் கட்சி. கடைசி நேரத்தில் அணி மாறி, காங்கிரஸிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டாலும், தீவிர ஈழத் தமிழர் ஆதரவுப் போக்குடைய அக்கட்சி, தனது புதிய கூட்டணியின் தலைமைக் கட்சியான அ.தி.மு.கவையே ஈழத்தமிழருக்கு அதிக பரிவு காட்டும் தரப்பாக மாறவைத்துத் தனது திறமையை வெளிப்படுத்தியிருக்கின்றது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை விடயத்தில் தமிழர்களுக்கு ஆதரவான மிகத் தீவிரப் போக்குக்கு அ.தி.மு.கவையும் அதன் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவையும் மாற்றச் செய்ததன் மூலம் அந்த அணியில் தாங்கள் இணைந்து கொண்டதன் நியாயத்தை டாக்டர் இராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சியும், வைகோவின் ம.தி.மு.கவும் நிரூபித்திருக்கின்றன எனலாம்.

ஆனால், தமிழகத்தின் ஆளும் தி.மு.கவோ, தான் சார்ந்த கூட்டணியின் தோழமைக் கட்சியான காங்கிரஸுடன் சேர்ந்து ஈழத் தமிழர்களைக் கைவிடும் செயலுக்கு உடந்தையாகி 'சோரம்' போன குற்றத்துக்காக இந்தத் தேர்தலில் பெரு விலை கொடுக்கப் போகின்றது என்று நம்பலாம்.

இலங்கைத் தமிழர்களைக் கைவிட்ட குற்றத்தில் இனிமேல் பிராயச்சித்தம் செய்யவே முடியாத அந்தத்துக்கு தி.மு.க. வந்துவிட்டதுதான் பரிதாபம். அரசியல் பிழைப்புக்காகப் பொறுப்புடன் செயற்படத் தவறிய அதன் தலைமை, இனிமேல் மீளவே முடியாத அதல பாதாளத்துக்குள் தூக்கி வீசப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அதேசமயம், மறுபுறத்தில் அதன் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.கவோ, இதுவரை இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அவர்களைத் தூக்கி எறிந்து, அவர்களின் நலன்களைப் புறம் ஒதுக்கி, உதாசீனமாக நடந்து கொண்டாலும் கூட, இப்போது இறுதி நேரத்தில் தன்னைத் திருத்திக் கொண்டு, நேர் வழிப் பாதைக்குத் தன்னை வழிப்படுத்தி, தன்னை உயர்த்திக்கொண்டது மட்டு மன்றி, அரசியலிலும் தன்னை ஸ்திரப்படுத்திக் கொண் டும் விட்டது.

பாவம்! தி.மு.கவும் அதன் தலைவர் கலைஞர் கருணாநிதியும். அரசியல் சாணக்கியராகக் கருதப்பட்ட அந்த முதியவரின் அரசியல் காலடி கடைசி நேரத்தில் இப்படித்தான் தவற வேண்டுமா?

# கனரக ஆயுதப்பாவனை தொடர்
# இந்தியாவுக்கு அளித்த வாக்குறுதியை மீறிவிட்டது

## இலங்கையின் போக்குக் குறித்து அகாஷிக்கு சம்பந்தன் விளக்கம்

கொழும்பு மே 04

இலங்கை அரசாங்கம் எடுத்த எடுப்பில் வாக்குறுதிகளை வழங்கும். ஆனால் அவை நடைமுறைக்கு வராது.

இந்தக் கதியே தான் கனரக ஆயுதங்களை பாவிப்பது இல்லை என்று இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிக்கும் ஏற்பட்டுள்ளது. அந்த வாக்குறுதியையும் இலங்கை மீறிவிட்டது.

இப்படி கூறினார் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் அதன் தலைவருமான இரா. சம்பந்தன். இலங்கைக்கு விஜயம் மேற் கொண்ட ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷியுடன் நடந்த சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சந்திப்பின் போது சம்மந்தன் கூறியவை வருமாறு.

சிறிலங்கா அரசாங்கத்தின் ஜனநாயகம் பற்றி எங்களுக்கு ஜப்பான் கூறவேண்டிய அவசியம் இல்லை. லசந்த விக்கிரமதுங்க உட்பட 2000 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 20 ஊடகவியலாளர்கள் நடுவீதியில் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இதுவரையும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. நாடாளுமன்ற உப்பினர்களை அரச படைகளுடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களும் சிறிலங்காவின் புலனாய்வுப் பிரிவினரும் கொலை செய்துள்ள னர். அதற்கான ஆதாரங்களை கூட்டமைப் பினராகிய நாங்கள் ஜனாதிபதியிடம் நேரடியாகக் கையளித்தும் இன்னமும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை.

கனரக ஆயுதங்களை பாவிக்கமாட்டோம் என இந்தியாவிற்கு வழங்கிய உறுதிமொழியைக்கூட சிறிலங்கா அரசாங்கம் மீறியுள்ளது. பலபல உத்தரவாதங்களை சிறிலங்கா அரசாங்கம் எடுத்தஎடுப்பில் வழங்கும். ஆனால் எதுவும் நடக்காது.

முள்ளிவாய்க்காலில் இயங்கிவந்த தற்காலிக மருத்துமனை கூட நேற்று முன்தினம் படையினரின் எறிகணைத் தாக்குதலுக்கு உள்ளாகி 64 நோயாளர்கள் கொல்லப்பட்டுள் ளனர். கடந்த மூன்று மாதங்களில் 7 ஆயிரத்திற்கு அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதுதான் சிறிலங்கா அரசாங்கத்தின் ஜனநாயகம் .

ஆகவே இடம்பெயர்ந்த மக்களை சொந்தக் கிராமங்களில் மீளக்குடியமர்த்துவார்கள், உரியமுறையில் நிவாரணம் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை தமிழர்களுக்கு இல்லை. இந்த நிலையில் ஜப்பான் போன்ற சர்வதேச நாடுகள் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நேரடியாக உதவிபுரிவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என இரா.சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் விளக்கமளித்ததாக சந்திப்பில் பங்குபற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜப்பான் ஹிரோசிமா, நாகசாகி போன்ற நகரங்களில் அணுக்குண்டுகள் வீசப்பட்டு லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட அவலமும் இன்று அதன் தாக்கம் நீடிப்பதும் ஜப்பானுக்கு புரியும். இந்த நிலையில் [illegible]த்தின் அவலங்கள் பற்றி உ[illegible] சொல்லவேண்டிய அவசிய[illegible] என கா[illegible]சாரமாக எடுத்துக்[illegible] வும் சுரேஷ் [illegible]ரேமச்ச[illegible] தெ[illegible]வித்தார்.

இந்தச் சந்திப்பின்[illegible] வாக்குவாதம் இடம் [illegible]றதாக[illegible] எதிர்வரும் காலங்களில் கொழும்புக்கு வரும்போது யசூசி அகாஷி தங்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பு இல்லை என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

# இடம் பெயர்ந்தோரைக் கவனிக்கும் முறைபற்றி யசூசி அகாஷிக்கு ஜனாதிபதி விளக்கமளிப்பு

கொழும்பு மே 04

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வரும் மக்களை அரசு கவனிக்கும் விதம் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கைக்கான ஜப்பானியப் பிரதிநிதி யசூசி அகாஷிக்கு விளக்கமளித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதர் யசூசி அகாஷி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்றை நடத்தினார்.

இதன் போதே வன்னி மக்களை கவனிப்பது குறித்து ஜனாதிபதியால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைவரம் குறித்தும் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்துவரும் மக்கள் தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு புதுமாத்தளன் மக்கள் பாதுகாப்பு வலயத்தினுள் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை மீட்பதற்காக படையினர் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்தும் அகாஷிக்கு விளக்கமளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

# சீனா வழங்கும் இராணுவ நிதி உதவிகளால் மேற்குலகைப் புறக்கணிக்கிறது இலங்கை

## இந்திய புலனாய்வாளர் ராமன் கூறுகிறார்

லண்டன், மே 4

சீனாவிலிருந்து நிதி மற்றும் இராணுவ உதவிகள் கிடைத்து வருவதன் காரணமாகவே இலங்கை அரசு தமிழ் மக்கள் தொடர்பில் சர்வதேச நாடுகளின் அழுத்தங்களைப் புறக்கணித்து வருகிறது என்று முன்னாள் இந்திய புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

ஜப்பானை ஒதுக்கித்தள்ளிவிட்டு சீனா இலங்கைக்கு பெரும் எடுப்பில் பண உதவி செய்து வருகின்றது. கடந்த ஆண்டில் மட்டும் ஏறக்குறைய ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் உதவியை இலங்கைக்கு சீனா வழங்கியுள்ளது என்று லண்டன் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சென்னையிலுள்ள சீனா தொடர்பான ஆய்வு மையத்தைச் சேர்ந்த பி.ராமன் கருத்து தெரிவிக்கையில் சீனாவின் உதவியினால்தான் சர்வதேச நாடுகளை இலங்கை உதாசீனம் செய்கின்றது என்று கூறியுள்ளார். இந்திய வெளிநாட்டு புலனாய்வு அமைப்பான ஆராய்ச்சி மற்றும் ஆய்வு மையத்தின் (RAW) கூடுதல் செயலாளராகவும் ராமன் முன்னர் பதவி வகித்துள்ளார். சீனாவின் உதவி யில் தங்கியிருக்க முடியும் என்பதை இலங்கை அறிந்து வைத்திருக்கிறது என்றார் ராமன்.

இதேவேளை - அம்பாந்தோட்டைக்கு அப்பால் சீனா இலங்கைக்காக ஒரு பில்லியன் டொலர் மதிப்பான துறைமுகத்தை அமைத்து வருகிறது. காலப்போக்கில் சீனாவின் கடற்படைத்தளமாக இது ஆகிவிடும் என்பதை சீனா அறியும் என்று ரைம்ஸ் பத்திரிகை எழுதியுள்ளது.

2007ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சீனா இந்தத் துறைமுகத்தைக் கட்டுவதற்கு இலங்கை சம்மதம் தெரிவித்ததிலிருந்து, விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்காக ஆயுதங்கள், மற்றும் இராஜதந்திர உதவிகளை சீனா வழங்கி வருகிறது என்று ரைம்ஸ் பத்திரிகை எழுதியுள்ளது.

இந்தியாவும் மேற்குலக நாடுகளும் இலங்கைக்கு உள்நாட்டுப் போரில் பாவிப்பதற்கு ஆயுதங்கள் விற்க மறுத்ததைத் தொடர்ந்து 1990களில் சீனா இலங்கையுடனான உறவைக்கட்டியெழுப்பத் தொடங்கியது என்று அப்பத்திரிகை எழுதியுள்ளது. மனிதாபிமான பிரச்சினையின் அடிப்படையில் இலங்கைக்கு இராணுவ உதவி வழங்குவதை அமெரிக்கா நிறுத்திக் கொண்டதையடுத்து 2007 ஆம் ஆண்டுக்குப் பிறகு இலங்கைக்கு ஆயுதங்கள் விற்பதை பீஜிங் அதிகரித்திருப்பதாக அப்பத்திரிகை கூறுகிறது.

துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை மிக முக்கிய வியூகமாக அமெரிக்க - இந்திய இராணுவ திட்ட வகுப்பாளர்கள் கருதுகிறார்கள்.

இத்திட்டத்தின் கீழ் சீனா, பாகிஸ்தானில் குவாடார் துறைமுகத் தையும் பங்களாதேஷில் சிட்டகொங் துறைமுகத்தையும் மியன்மாரில் சிட்வே துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்து வருகின்றது.

தற்காப்பு ஆயுதங்களை மட்டுமே வழங்க முடியும் என்று இந்தியா அறிவித்ததன் பின்னர் இந்த விடயத்தில் சீனா தலை நீட்டியுள்ளதாக அப்பத்திரிகை கூறியது.

இலங்கைக்கு ஆயுதம் விற்கவும் சீன யுத்த விமானங்களில் விமானிகளுக்கு பயிற்சியளிக்கவும் பாகிஸ்தானுக்கு சீனா ஊக்கமளித்து வருவதாக அப்பத்திரிகை பெயர் குறிப்பிடப் படாத இந்திய பாதுகாப்பு வட்டாரங் களை மேற்கோள்காட்டி எழுதியுள்ளது. (ப)

# வெளிநாட்டு அழுத்தங்களுக்கு எதிராக கூட்டு இராஜதந்திர நடவடிக்கை

## வெளிநாட்டு அமைச்சு தீர்மானம்

கொழும்பு, மே 4

நாட்டின் நிர்வாகத்தில் அவசியமற்ற சர்வதேச அழுத்தங்களுக்கு எதிராக அரசு கூட்டு இராஜதந்திர நடவடிக்கையொன்றை ஆரம்பித்திருப்பதாக வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் வெளிநாட்டு அமைச்சர்களுடன் குறிப்பாக மேற்குலக நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களுடன் தொடர்ச்சியான தொலைபேசி உரையாடல்கள் நடத்தப்பட்டு இலங்கையில் உள்ள உண்மை நிலைவரம் எடுத்துரைக்கப்படும் என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். இதன் முக்கிய நோக்கம் இலங்கையின் உண்மையான நிலைவரம் அவர்களுக்கு விளக்கப்படும் என்று அவர் கூறினார்.

பிரெஞ்சு வெளிநாட்டமைச்சர் அண்மையில் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் வெளிநாட்டமைச்சர் ரோகித போகொல்லாகம அவருக்கு டெலிபோனில் விளக்கம் அளித்திருந்தார் என்று அதிகாரி தெரிவித்தார்.

உண்மைநிலைமைகளைக் கண்டறிவதற்காக வெளிநாட்டு அதிகாரிகள் தொடர்ச்சியாக வருகை தருவதால் [illegible]ட்ட இலங்கை அதிகாரிகள் களைப்பு அடைந்துவிட்டார்கள் என்றும் கூறப்படுகின்றது. (ப)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 22 | 05.05.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | மு.ப. 11.09 வரை |
| நட்சத்திரம்: | உத்தரம் |
| | மு.இ. 11.44 வரை |
| சுபநேரம்: | 10.2[illegible] - 11.56 |
| ராகுகாலம்: | [illegible] - 04.26 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி, பூரணம் சுப்பையா

எமது கழக உறுப்பினர்களான திரு.சு.உமா சங்கர் திரு.சு.கோபிசங்கர் ஆகியோரின்அன்புத் தாயாரும் திரு.சி.சபாஆனந் அவர்களது பேர்த்தியாருமான அமரர் திருமதி பூரணம் சுப்பையா அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த துயர டைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரி வித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய நண்பர்கள், K.C.C.C நண்பர்கள். (85019)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 ★ 05 ★ 1926

மறைவு 04 ★ 05 ★ 2008

### திருமதி சண்முகம் பொன்னம்மா (பொன்னு)

திதி:-சதுர்த்தசி (பேருவள ஆாவளை 23.05.09) சனிக்கிழமை

ஓராண்டு முடிந்ததம்மா
எம்மைவிட்டு பிரிந்து சென்று
நீ வாழ்ந்த காலமெல்லாம்
நீங்காத நினைவாக நிழலாடு[illegible]மா - இனி
தூங்காது எம் கண்ணீர்
எம் உயிர் உள்ளவரை
ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ராஜராஜேஸ்வரி அம்மன் வீதி, சண்டிலிப்பாய் கிழக்கு, சண்டிலிப்பாய்.

வி.எஸ்.இராசதுரை குடும்பம் (மகன்). (85023)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பூரணம் சுப்பையா



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் சுப்பையா நேற்று (03.05.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற (கலைச் செல்வன்) ஏரம்பு சுப்பையாவின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னப்பிள்ளை தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஏரம்பு-தங்கமுத்து தம்பதியினரின் மருமகளும், சாந்தினி (விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்), சௌதாமினி, கிருபானந்தன்,உமாசங்கர், கிருத்திகாயினி, குமுதினி, உதயசங்கர், கோபிசங்கர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவநேசன், கலா, ராசாத்தி, ஜெகதீஸ்வரன், சிறிகாந்தன்,திபானி ஆகியோரின் அன்பு மாமியாரும் , சபாஆனந் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), தேவந்தி(இராமநாதன் நுண்கலைக் கல்லூரி), மயூரன், செந்தூரன் , சகாரன், அருண், அர்ச்சுன், சுயாவந்தி, மதுவந்தி, அனுவந்தி, உஷாந்தி, புருஷோத், ப்ரீதி ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொக்குவிலில் அவரது இல்லத்தில் இன்று (04.05.2009) திங்கட்கிழமை மு.ப 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கலாபவனம்", கொக்குவில். (85018)

தகவல்: சாந்தினிசிவநேசன்(மகள்).

### செல்லையா கவிராசசிங்கம்

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா கவிராசசிங்கம் நேற்று (03.05.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்-பவளம்மா தம்பதியினரின் மருமகனும்,காஞ்சனமாலாவின் அன்புக் கணவரும், பிரபாகரன், யாழினி ஆகியோரின் தந்தையும், ஆதவனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தர்மசேனன் மற்றும் அன்னராசா, செல்வராணி, இந்திராணி, கைலேந்திரன் , சிவராசா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2009) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத் தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீலியம்பனை, மல்லாகம் (85024)

தக்வல் மனைவி,பிள்ளைகள்

## தவறிவிட்டது

மூக்குக் கண்ணாடி உட்பட சில பொருள்கள் கடந்த சனிக்கிழமை தெருமூடி மடத்தடிக்கும், தம்பசிட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் காலை 8 மணிக்கு முன்னரும், மாலை 6 மணிக்குப் பின்னரும் 2263608 என்னும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். தகுந்த சன்மானம் வழங்கப்படும் .(சி/558317)

## மணமகள் தேவை

வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கொழும்பில் அரச நிறுவனத்தில் உயர் பதவி வகிக்கும் 38 வயதுடையதும் செவ்வாய்க் குற்றமற்ற உத்தரட்டாதி 2ம் பாதம் கிரக பாவம் 40 கொண்ட மணமகனுக்கு விஞ்ஞானப் பட்டதாரி 31 வயதிற்கு உட்பட்ட மணமகள் தேவை (சி/558318) மே/பா-5894, உதயன்.

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நிகழுமா? நோய் நீங்குமா? காரியம் கைகூடுமா?

ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞானத்துணையோடு உங்கள் எதிர்கால பலன்களை எளிதாய் அறிந்திட இன்றே நாடுங்கள்!

டாக்டர் த.சிவானந்தன், பிரபல சோதிடர், 5, வைமன் வீதி, நல்லூர். (85008)

## தவறிவிட்டது

45/10, நாயன்மார்வீதி, நல்லூர் என்னும் முகவரி யுடைய அமிதலிங்கம் சசிகரன் என்பவரின் தேசிய அ. அட்டை (822224709V) யாழ்ப்பாணத் துக்கும்,நல்லூருக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.6,செட்டித் தெரு, நல்லூர் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (85021)

## வேம்பிராயில் குழாய்க்கிணறு

யாழ்ப்பாணம்,மே 04

தென்மராட்சி பகுதி நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களின் குடிதண்ணீர் வசதி கருதி மேலும் ஒரு குழாய்க் கிணறு மீசாலை வேம்பிராய்ப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் அபி விருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் இத் தகவலைத் தெரிவித்தார்

சாவகச்சேரி, மிருசுவில், கொடிகாமம் போன்ற பகுதியில் உள்ளநலன்புரி நிலையங்களுக்கு இக் குழாய்க் கிணறு மூலம்குடி தண்ணீர் விநியோ கிக்கப்பட்டு வருகின்றது.

தண்ணீர் மட்டம் குறையாத இக் குழாய்க் கிணறு மூலம் தொடர்ந்து குடிதண்ணீரை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (203-224)

## சமய சந்நிதிகளில்

புலோலி புற்றாளை சித்தி விநாய கர் ஆலய மணவாளக்கோல சங்காபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் 1008 சங்காபிஷேகமும், விஷேட பூசைகளும் அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும் இடம்பெற்று விநாயகப் பெருமான் வீதி உலா வருவார்.

அதனைத் தொடர்ந்து, திருவடி காண்போம். என்னும்தலைப்பில் சைவப் புலவர் பொன். சுகந்தன் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (203-236)

***

நீர்வேலி கந்த சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவில் காவடி திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (203-224)

### வலுவிழந்தோருக்கு உபகரணங்கள்

கோப்பாய்,மே.04

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வலுவிழந்தோருக்கான உபகரணங்களைப் பெற விண்ணப்பித்தவர்களுக்கு ஒரு முச்சக்கரவண்டியும் 4 சக்கர நாற்காலிகளும் பிரதேச செயலகத்திற்கு வடமாகாண சமூக நலத்துறை திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றினை உரிய பயனாளிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்[illegible] (203-72)

EDWARD MAKES RED OINTMENT
றெட் ஒயின் மென்ற்

பித்தவெடிப்பு,நீர்ச்சிரங்கு,புண்,புரை,பருக்கள், கட்டு, படுவன்,அக்கி,கிரந்திஅவியல், தலை அவியல், சொறி, தீச்சுட்ட புண்,வெட்டுக்காயம், உரோஞ்சல்,வட்டக்கடி, அரைக்கடி சகலதையும் குணமாக்கவல்லது.

றெட் ஒயின் மென்ற் எனக் கேட்டு வாங்குங்கள்
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

வைத்தியாச்சாரி,வைத்தியபூபதி,கலாபோதி.
டாக்டர் கபிரியேல் எட்வேட் ( L.A.M.P.R.I.M.P)
63,குருசோ வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
edward makes @ hotmail. com
T.P:- 0772300510 (85020)

SUBRA (14)
கலைவர்த்தக கணித விஞ்ஞானப் பிரிவுகள்

05.05.2009 பி.பகல் 4.00 மணி

| | சித்தங்கேணியில் | வட்டுக்கோட்டையில் |
|---|---|---|
| தமிழ் | தமிழ்ந்திரன்-பசிதன் | அமரசிவம் |
| இந்து நாகரீகம் | சந்திரன் | கோபி |
| அளவையியல் | E.S.பவன் | E.S.பவன் |
| நாடகம் | கணேஷ் | கணேஷ் |
| அரசியல் | அசோக் | அசோக் |
| புவியியல் | ஐங்கரன் | ஐங்கரன் |
| விவசாயம் | கஜேந்திரன் | கஜேந்திரன் |
| சித்திரம் | அருள்ரமேஷ் | அருள்ரமேஷ் |
| வரலாறு | ஜெயக்குமார் | ஜெயக்குமார் |
| கிறிஸ்தவம் | அன்ரனி | அன்ரனி |
| மனையியல் | மல்லிகா | மல்லிகா |
| இல.கணிதம் | சீலன் | தவசேகர் |
| வணிகம் | நந்தீஸ் | நந்தீஸ் |
| கணக்கீடு | சுபேசன், சீலன் | சுபேசன் |
| பொருளியல் | ஜெயக்குமார்,ஸ்ரீ | ஜெயா; சந்திரன் |
| வணி.புள்ளி | தவசேகர் | தவசேகர் |
| இரசாயனம் | ராஜா | தாரணி |
| பௌதிகவியல் | Science Corner ஆசிரியர் | செந்தில்குமரன் |
| இணைந்த கணிதம் | ஐங்கரன் | ScienceCorner ஆசிரியர் |
| உயிரியல் | கபான் | பொன்.திவாகரன் |

English: BRITTO
English Medium-Physics- Sun
Bio-Kajan
C.G.P:தவசேகர்
Chemistry:- Kannathasan
C.maths: Sathyaseelan (85022)

* ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
* வறிய மாணவர்களுக்கு விசேட சலுகைகள்.
* சாரைநகர் பகுதி மாணவருக்கு 50% சலுகைக் கட்டணம்.

## விட்டகலா நினைவுகளோடு துயர்தாங்கி நிற்கின்றோம்

### கணேசமூர்த்தி சிவகுமாரன்

(நெல்லியடி சிவம்)



காலம் கிழித்திட்ட
ஒரு தேதியாய்
நிகழ்ந்து விடுகிறது
மரணம்

ஆயினும்
நீ முன்பிருந்தாய்

புன்னகைத்து பிரியும்
இறுதித் கணத்திலும்
'நாளை கதைக்கிறன்'
எனப் பிரிந்தாய்.....

காற்றே
அந்த வார்த்தைகளை
எம்மிடம் தந்துவிடு
நாளைக்கும் அப்பாலும்
நீளும் காலமே
அந்த வார்த்தைகளை
எமக்காய் தந்துவிடு

காலம் பதித்திட்ட
ஒரு பொழுதாய்
நீ முன்பும் இருந்தாய்
என்றும்.......

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி-பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் துரைராஜா-மீனாட்சிசுந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சாந்தினியின் ஆருயிர் கணவரும் சகானா, அனாமிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ராமச்சந்திரன், ரவீந்திரநாத், சாரதாதேவி (லண்டன்), இந்திராதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

எம் இனிய தோழருக்கு எங்கள் ஆத்மார்த்தமான அஞ்சலி!

தமிழர் வளத் துறைவள நிலையம்
Tamil Resources Centre (சி/558310)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மே 4

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று திங்கட்கிழமை இடம்பெறும் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

எனவே இந்த மாத முதலாவது கப்பலுக்கான அனுமதிச் சீட்டினைப் பெற்றுக் கொண்டவர்களையும் அவசர தேவையின் நிமித்தம் செல்ல இருப்பவர்களையும் இன்று காலை 9 மணிக்கு யாழ்.ரயில் நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுள்ளார். (203 -7)

## பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாணம், மே 4

இணுவில் திருநெறிய தமிழ் மறைக் கழகம் வருடாந்தம் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் பண்ணிசைப் போட்டிக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிகள் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

போட்டிகள் தரம் 4 -6, 7 - 9, 10 - 12 என மூன்று பிரிவுகளாக நடைபெறும். விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 10ஆம் திகதியாகும். (203-7)

## சிங்கள வகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 4

தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்குட்பட்ட இணுவில் கிழக்கு இளைஞர் கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் ஐந்து மாத கால ஆங்கில, சிங்கள கற்கைநெறிகளின் தொடர்ச்சியாக சிங்களம் பிரிவு II ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கற்கை நெறி நாளை செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு கழக மண்டபத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (203-7)

## வலுவிழந்தோருக்கு உதவி

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நவாலி வடக்கு செயலர் பிரிவிற்குட்பட்ட நவாலி வடக்கு, நவாலி தெற்கு, நவாலி கிழக்கு பகுதிக்கு உட்பட்ட வலுவிழந்தோருக்கு நவாலி எச்.எஸ்.சி.எம்.எப் நிறுவனம் மறைந்த சமுர்த்தி அலுவலர் செ.சதீஷ் ஞாபகார்த்தமாக உதவிப் பொருள்கள் வழங்கவுள்ளது.

எனவே, மேற்படி பிரிவிற்குள் வசிக்கும் ஊனமுற்றவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் நவாலி தெற்கில் உள்ள ஹேமலதா செல்வராஜா குழந்தைகள் ஞாபகார்த்த நிதியத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு தலைவர் கேட்டுள்ளார்.

பதிவின்போது குடும்பப் பதிவு அட்டை, ஊனமுற்றோருக்கான மருத்துவச் சான்றிதழ், முழுப்பெயர், வயது, முகவரி மற்றும் கிராம அலுவலர் சான்றிதழ்களுடன் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.

உதவி எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (203-95)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோருக்கான

## குடிதண்ணீர் விநியோகத்தை சீர்செய்வதற்கு மேலும் ஒரு பவுசர் தருவிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், மே 4

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோருக்கான குடிதண்ணீர் விநியோகிக்கும் சேவையை சீர் செய்யும் நோக்குடன் தேசிய குடிதண்ணீர் வழங்கல் அபிவிருத்தி அதிகார சபைக்கு தண்ணீரை ஏற்றிச் செல்லும் பவுசர் ஒன்று அவசரமாக கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளது.

ஒரே தடவையில் 13 ஆயிரம் லீற்றர் தண்ணீரைக் கொண்டு செல்லக்கூடிய வகையில் இந்த பவுசர் எடுத்து வரப்பட்டுள்ளது என்று தேசிய குடிதண்ணீர் வழங்கல் அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே மூன்று பவுசர்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

தென்மராட்சிப் பகுதி நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தைச் சீராக நடத்துவதற்கே இந்த பவுசர் எடுத்து வரப்பட்டுள்ளது.

தற்போது இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களிலுள்ளவர்களுக்கு மூன்று பவுசர்களும் மற்றும் ஒரு பவுசர் ஊர்காவற்றுறை பிரதேசத்திற்கும் குடிதண்ணீர் விநியோகிக்கும் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. (203-224)

## மாற்று ஆற்றலுடையோருக்கு சுயதொழில் திட்டம்

கோப்பாய், மே 4

வடமாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தால் மாற்று ஆற்றல் உடையோர்களுக்கு சுயதொழில் திட்டம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பயனாளி ஒருவருக்கு இதற்கென 50 ஆயிரம், 20 ஆயிரம், 15 ஆயிரம் என 3 கட்டங்களாக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தில் இணைந்து பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், ஊனமுற்றவர்களின் உறவினர்கள் தொழில் செய்ய முடியுமாயின் அவர்களுக்கு உதவிகள் வழங்கப்படும்.

திட்டத்தில் இணைபவர்கள் தங்களால் கூறப்பட்ட சுயதொழிலை முன்னேற்றகரமாக நடத்த வேண்டும்.

பயனாளி கொடுப்பனவை பெற்றபின் சுயதொழிலில் ஈடுபடாவிடில் கொடுப்பனவு மீளப்பெறப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் தெரிவு செய்யப்படுபவர்கள் வேறு எந்த நிறுவனங்களிடமிருந்தும் அண்மையில் உதவித் தொகையை பெறாதவர்களாக இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-72)

## ஓவியப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

கோப்பாய், மே 4

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 'போதையற்ற வாழ்வு' எனும் தலைப்பில் ஓவியப் போட்டியை நடத்தவுள்ளது.

இப்போட்டி பிரதேச செயலக மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் ஆகிய ரீதியில் நடைபெறவுள்ளது.

பிரதேச மட்டத்தில் 10 ஓவியங்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட போட்டிகள் நடைபெறும்.

மாவட்ட மட்டத்தில் 15 ஓவியங்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு மாகாண மட்டப் போட்டி நடைபெறும்.

முதலாம் பரிசாக 15 ஆயிரம் ரூபாவும், 2ஆம் பரிசாக 10 ஆயிரம் ரூபாவும், 3ஆம் பரிசாக 7 ஆயிரத்து 500 ரூபாவும் மேலும் 5 ஓவியங்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு மட்டத்திலும் பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் மாவட்ட மட்டத்தில் கண்காட்சி நடத்தப்படுவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் தமது பிரிவு பிரதேச செயலக கலாசார அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-72)

## பகல்வேளை ஆள்கள் இல்லாத வீட்டில் நகைகள், பணம் என்பன திருட்டு

யாழ்ப்பாணம், மே 4

ஆள்கள் இல்லாத நேரம் பட்டப்பகல் வேளை வீட்டினுள் நுழைந்த திருடர்கள் சுமார் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளார்கள்.

மல்லாகம், சோடாக் கம்பனி ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு வீட்டுப் பொருள்கள் வாங்கச் சென்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

ஒரு லட்சம் ரூபா பணம் மற்றும் மூன்று பவுண் சங்கிலி, காப்பு உட்பட சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் திருட்டுப் போயுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விக்கிரமசிங்கா தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (203-68)

## நலன்புரி நிலைய மக்களுக்கு உப உணவுப் பொருள்கள்

குருநகர், மே 4

'கியூடெக்' நிறுவனம் வன்னியில் இருந்து யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு உப உணவுப் பொருள்களை வழங்கியுள்ளது.

இதுவரை எட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு இவ் உப உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-51)

## அனர்த்த இடர் முகாமைத்துவ செயலமர்வு

வேலணை, மே 4

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆசிரிய ஆலோசகர்கள் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் ஆகியோருக்கான அனர்த்த இடர் முகாமைத்துவச் செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம், 3 நாள்களுக்கு யாழ்.ஆசிரிய வளநிலையத்தில் இடம்பெறவுள்ளது. (203-267)

## இடைவிலகிய மாணவர்களை பாடசாலைகளில் இணைக்க ஏற்பாடு

கோப்பாய், மே 4

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 31 கிராம அலுவலர் பிரிவிலும் பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவரைப் பாடசாலையில் மீள் இணைப்பதற்கான திட்டம் முறைசாரக் கல்விப் பிரிவினாலும் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு பிரிவினாலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் மற்றும் சிறுவர் மேம்பாட்டு அலுவலர் ஆகியோர் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அனுசரணையாக இருப்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக பாடசாலையில் இருந்து இடைவிலகி தொழில் செய்வோரின் குடும்பத்தினருக்கு யு.என்.டி.பி. திட்டத்தினூடாக மீளவும் பாடசாலையில் இணைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (203-72)

## சிறுவர் கழகத்திற்கு காணி அன்பளிப்பு

கோப்பாய், மே 4

நீர்வேலி போயிட்டிப் பகுதியில் 'வேள்ட் விஷன்' ஆதரவோடு புதிதாக அமைக்கப்படவுள்ள சிறுவர் நட்புறவுக் கழகத்திற்கான புதிய கட்டடத் தொகுதிக்கு 4 பரப்புக் காணியை லண்டனில் வசிக்கும் திருமதி யோகநாதன் இராசதேவி அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

## வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஆதனவரி மீள் மதிப்பீடு

சங்கானை, மே 4

வலிகாமம் மேற்கு பிரதேசசபை தனதெல்லைக்குட்பட்ட ஆதனங்களை மீள மதிப்பீடு செய்யும் நடவடிக்கையை இன்று திங்கட்கிழமை தொடக்கம் மேற்கொள்ளவுள்ளது.

குறித்த பிரதேச சபையின் சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி உப அலுவலகங்கள் தமது பகுதியிலுள்ள ஆதனங்களை ஒவ்வொரு குழுக்களாக இணைந்து மேற்கொள்ளவுள்ளன.

இக்குழுவில் கிராம உத்தியோகத்தர், பொறுப்பதிகாரி, வருமான மேற்பார்வையாளர் தொழினுட்ப உத்தியோகத்தர், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் என்போர் இடம்பெற்றுள்ளனர்.

எனவே மீள் மதிப்பீட்டுக்கு பொதுமக்கள் அனைவரையும் ஆதனவரி நிலுவையை செலுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு வலி.மேற்கு பிரதேச செயலர் சு.புத்திரசிகாமணி கேட்டுள்ளார். (203-7-29)



இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.பிரிவு நடத்திய தொண்டர்கள் கௌரவிப்பு விழா யாழ்.மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.
யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முதல் இரண்டு படங்களிலும் யாழ்.செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் வீ.கே.கணேசலிங்கம், செஞ்சிலுவைச் சங்க நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.குகதாசன் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம்.
நிகழ்வில் கலந்துகொண்ட செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களை அடுத்துள்ள படத்தில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜீ.சீ.ஈ (சாதாரண) பரீட்சையில் மேலும் சில பாடசாலை முடிவுகள்

யாழ்ப்பாணம், மே.5

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜீ.சீ.ஈ (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகளை மேலும் சில பாடசாலை அதிபர்கள் ''உதயனுக்கு'' அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த முடிவுகள் வருமாறு:

கொடிகாமம்

திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்

கு.கோபிகா - 9ஏ, இ.பானுப்பிரியா - 6ஏபிசிஎஸ், கு.கனேந்திரன் - 6ஏபிசி, சி. அகிலாண்டேஸ்வரி - 5ஏ2பிசிஎஸ், தே.பிரசாத் - 4ஏ2சி3எஸ், த.கம்சாயினி - 3ஏ5சி, எஸ், வே.குலசாந் - 2ஏ4பி2சி, ச.சத்தியவதனன் - 2ஏ2பி2சி2எஸ், த.ரமணன் - 2ஏபிசி2எஸ்.

கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தியாலயம்

கு.சுஜீவன் - 2ஏ3பிசிஎஸ், தெ.அனுசியன் - ஏ4சிஎஸ், க.ஜன்சி - ஏபி4சி2எஸ், உ.டிலானி - ஏ2சி4எஸ், க.ஜசிந்தா - ஏ2சி4எஸ், சி.பானுஜா - பி5சி2எஸ், இ.துளசிகா - ஏ2பி2சி2எஸ், ர.டட்சாயினி - ஏபி5சிஎஸ், சே.ஜானுகா - பிசி4எஸ், ஐ.ஹேமலதா - ஏபிசி4எ

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி

மாதங்கிஜெயசீலன் - 6ஏ2பிசி, சரத்சந்திரபோஸ் விஸ்வரூபன் - 4ஏ4பிசி, லக்சுமிபிரியா ஜெயச்சந்திரா - 3ஏ4பி2சி, குணபால சுந்தரம் ரமணன் - 3ஏ3பி2சிஎஸ், சாருஹாசினி சிவசோதி - 3ஏ3பி2சி, பத்மலோஜினி விஜயராஜ் - ஏபி4சி2எஸ், சரணியா ரவிச்சந்திரன் - ஏபி4சி2எஸ், மயூரி இராஜகுரு - ஏபி3சி3எஸ், தவராசா அஜித் - ஏபி3சி3எஸ், மகேந்திரன் பிரசாந் - ஏ3பி3சி, தவராஜசிங்கம் பிரஸ்ணவி - ஏ2பி2சி2எஸ், இராதாகிருஷ்ணன் பிரேம பகீரதன் - ஏசி6எஸ், மோகனசபாபதிப்பிள்ளை மாதவன் - பி3சி3எஸ்.

(9-236-253)

# சேவை நலன் பாராட்டு



திருமதி

கமலாம்பாள் மகேந்திரன்

(விசேட விஞ்ஞானப் பயிற்சி,

தேசிய விஞ்ஞான டிப்ளோமா SLTS I)

சேவை விவரம்

| | |
|---|---|
| யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி | 01.02.77 - 30.12.79 |
| பலாலி ஆசிரியர் கலாசாலை | 01.01.80 - 30.12.82 |
| கிளி/கிளிநொச்சி கனிஷ்ட ம.வி. | 01.01.83 - 30.09.86 |
| கிளி/தருமபுரம் ம.வி. | 01.01.87 - 30.04.89 |
| யா/ வட்டு. இந்துக் கல்லூரி | 01.05.89 - 30.04.98 |
| யா/வட்டு. மத்திய கல்லூரி | 01.05.98 - 30.04.2009 |

32 வருட கால ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியை, 10 வருட காலங்கள் எமது கல்லூரியின் விஞ்ஞானத்துறைப் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றி கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியுள்ளார். 01.05.2009 இல் ஓய்வு பெற்றுச்செல்லும் ஆசிரியையின் சேவையைப் பாராட்டுவதுடன், அவரது ஓய்வுக் காலம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

யா/வட்டு. மத்திய கல்லூரி, அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், வட்டுக்கோட்டை.

## ஈஸ்வரம்மா தின விழா

யாழ்.பகவான் சத்தியசாயி சேவா நிலையத்தில் ஈஸ்வரம்மா தின விசேட பஜனை நாளை மறுதினம் புதன் கிழமை மாலை 4.30 மணி தொடக்கம் 5.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இதேவேளை - ஈஸ்வரம்மா தின விழா எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நச்சியார்செல்வநாயகம் சிறப்பு சொற்பொழிவாற்றுவார். (7)

Affordable and Internationally Recognised

JAFFNA

MBA

Master of Business Administration

Specialize in
Marketing
Human Resources
Information Systems
Finance



Sikkim

Manipal University

An integrative program designed to provide an advanced course in management for those seeking senior positions in industry, commerce and public services. The core subjects of the Manipal MBA are aimed at developing knowledge and skills in fundamental management disciplines, improving the decision making abilities of participants and producing managers of the highest quality.

The most accepted foreign MBA programme in Srilanka with over 500 students enrolled

Admissions now on

May 2009 intake

மேலதிக விபரங்களுக்கு | நிரஜ் 077 9863666

FIRST BATCH SUCCESSFULLY COMPLETED IN JAFFNA

Manipal INSPIRED BY LIFE

Manipal International Study Centre

IIS CITY CAMPUS

#200, Sivan Pannai Road, Jaffna.

T.P: 021 222 8060

## தேவை

திருநெல்வேலியிலுள்ள காரியாலயம் ஒன்றிற்கு ஓரளவு சமையல் வேலை தெரிந்த தொழிலாளி தேவை.

தொடர்பு:

தொலைபேசி இல: 222 2478, 0774618719

(84795).

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1084 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

22 24 42 49

மகரம்

01-05-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 4,710,050/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 167,779 | 20/- | 3,355,580/- |
| 2 இலக்கங்கள் | 15,361 | 40/- | 614,440/- |
| 1 இல. + லக்கினம் | 15,271 | 60/- | 916,260/- |
| 2 இல. + லக்கினம் | 1451 | 200/- | 290,200/- |
| 3 இலக்கங்கள் | 424 | 1000/- | 424,000/- |
| 3 இல. + லக்கினம் | 33 | 10,000/- | 330,000/- |
| 4 இலக்கங்கள் | 1 | 200,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 4,710,050/- | 4,710,050/- |
| மொத்தம் | | | 10,840,530/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 200,326 | | 11,340,530/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

2009 மே 05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்


அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| பதுளை | 500129389-9-11 |
| கேகாலை | 500127096-4-22 |
| மாத்தளை | 500122088-2-24 |
| கண்டி | 500120376-5-01 |
| இரத்தினபுரி | 500125291-5-46 |

## நெஞ்சைவிட்டகலா ஈராண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 ★ 04 ★ 1944



உதிர்வு 28 ★ 04 ★ 2007

அமரர் செல்லையா சின்னத்துரை (கிளாக்கர்)

திதி: ஏகாதசி (04.05.2009)

நெஞ்சிலே பசுமரத்தாணிபோல் நிலைத்திட்ட அப்பா
அன்பும் அரவணைப்பும் கொண்டு அறிவூட்டிய அப்பா
எம்மை விட்டு எங்கு சென்றீர்
என்றும் எங்கள் உறவுகளில் கலந்திடுவீர்
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



ஜனனம் 11 ★ 03 ★ 1972

மரணம் 26 ★ 04 ★ 2007

அமரர்

தங்கராசா ரமணன்

நீண்ட காலம் எம்முடனிருந்து
நிம்மதி தருவா யென்று
வேண்டித் தவம் செய்தோம்
வெள்ளைக் கொம்பனை
ஆண்டவன் அன்புடன் உன்னை
அரவணைத்ததேனோ!
ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
ஆறாதையா எமதுள்ளம்......

'தங்கநிலா',
வதிரி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரீ.வி பார்க்கும்போது அழுவதும் மன இறுக்கத்தின் வெளிப்பாடே!






**கேள்வி:** ஆண். வயது 28. எனக்கு நரம்புத் தளர்ச்சி, தலைச்சுற்று, படபடப்பு, உடல்வலி உள்ளது. விரைவில் இறந்து விடுவேனோ என்ற பயம் மனதில் அடிக்கடி ஏற்படுகின்றது. எனக்கு புகைபிடிக்கும் பழக்கம் உள்ளது. புகைக்கும் போதுதான் இந்த மாதிரி ஏற்படுகிறது. திடீரென்று எல்லாம் மறந்து போகும். எதிலும் மனதை நிலை நிறுத்த முடியாது. மருத்துவரை கலந்தாலோசித்த போது அவர் எனக்கு Anxiety Neurosis என்ற மனநோய் ஏற்பட்டிருப்பதாகக் கூறி மருந்துகள் தந்தார். அதற்கும் எனக்குப் பெரிதாக குணம் ஏற்படவில்லை. பரிகாரம் கூறவும்.

**பதில்:** உங்கள் வைத்தியர் கூறியபடி நீங்கள் Anxiety என்கின்ற பதற்றநிலை மனோவியல் கோளாறால் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள். புகைக்கும் போது நீங்கள் இந்த குணம் குறிகள் அதிகரிப்பதாகக் கூறியிருக்கின்றீர்கள். கோப்பியில் உள்ள Caffeine என்ற நச்சுப்பொருள், புகையிலையில் உள்ள Nicotine என்ற நச்சுப்பொருள் Anxiety நிலையை அதிகரிக்கச் செய்கின்றன. மருந்துகள் மட்டும் உங்கள் கோளாறை குணப்படுத்தமாட்டாது. வாழ்க்கை முறை யில் மாற்றங்கள், கிரமமான உடற்பயிற்சி, நிறைய நீராகாரங்கள், தகுந்த சராசரியான உணவு, பழவகைகள், Recreational Activities எனப்படும். மனதுக்கு இன்ப உணர்வு தரும் பொழுது போக்கு, விளையாட்டு செயற்பாடுகள் Creative Activities எனப்படும். வரைதல், சிற்ப வேலை, எழுதுதல் போன்ற படைப்புச் செயற்பாடுகள் என்பவை மன







இறுக்கத்தை குறைக்கும். மன இறுக்கம் குறையும் போது இந்தப் பதற்ற நிலை நிச்சயம் குறையும்.

* * *

**கேள்வி:** எனது கணவர் வயது 64. அவருக்கு கக்கத்தில் (Armpit) 6 - 7 பொக்களங்கள் வந்துள்ளன. அவருக்கு நீரிழிவு நோய் எதுவுமில்லை. இதற்கு காரணம் என்ன? கடந்த மாதம் கைமூட்டிலும் முழங்கால் பகுதியிலும் இப்படி பொக்களங்கள் ஏற்பட்டன. இதற்கு சிகிச்சை அவசியமா? பொக்களங்கள் அடிக்கடி ஏற்படுவதைத் தடுக்க முடியுமா?

**பதில்:** உங்கள் கணவரின் பொக்களங்களை Furuncles என்று குறிப்பிடுவார்கள். இயலுமானால் இந்த பொக்களங்களில் சீழ் எடுத்து, Culture & Abst பரிசோதனை செய்ய வேண்டும். பொக்களங்கள் ஏற்படுவதற்கு காரணமாக உள்ள பற்றீரியாக்களையும் - இந்த பற்றீரியாக்களை அழிப்பதற்கு ஏற்ற மருந்துகளைப் பற்றிய விவரங்களையும் இந்த பரிசோதனைகள் மூலம் நீங்கள் அறிந்து கொள்ளமுடியும். இது தவிர - அடிக்கடி பொக்களங்கள் ஏற்படுவதால்- உங்கள் கணவரை ஒரு பொது மருத்துவ பரிசோதனைக்கு (General Medical Check up) உட்படுத்த வேண்டும். உடல் பெருத்திருந்தால் - நிறையைக் குறைக்க உண வுக் கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சி தேவை. உணவில் நிறைய பழங்கள் - காய்கறிவகைகள் சேர்க்கப்படவேண்டும். தினமும் மருத்துவ சவர்க்காரம் - உபயோகித்து குளித்தல் அவசியம். கைகளை அடிக்கடி கழுவி - சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். அவரது உடுப்புக்கள் துவாய்கள் என்பவற்றை மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது. உள்ளாடைகள், இரவு உடுப்புக்கள் என்பன தினமும் மாற்றப்பட வேண்டும். ஓடுதல், விரைவு நடைப்பயிற்சி, டென்னிஸ் போன்ற விளையாட்டுக்களைத் தவிர்க்கவும். இரத்தசோகை இருப்பின் இரும்பு மாத்திரைகள், விட்டமின் C மாத்திரைகள் எடுக்கலாம். இத்துடன் மருத்துவரின் ஆலோசனையுடன் இந்த பற்றீரியாக்களுக்குரிய Antibiotic மருந்து குறைந்தது இரண்டு வாரமாவது தொடர்ந்து கொடுக்கப்பட வேண்டும்.

* * *

**கேள்வி:** ஆண். வயது 50. எனக்கு மன இறுக்கமும், கலக்கமன நிலையும் (ANXIETY) இருக்கின்றது. மூன்று வருடங்களுக்கு முன்னர் எனக்கு கிடைக்க வேண்டிய பதவி உயர்வு, கிடைக்காமல் போனதன் பின்னர் இது ஏற்பட்டது. திடீர் திடீரென நான் உணர்ச்சி வசப்படுகிறேன். சிறிய விஷயங்கள் கூட என்னைப் பாதிக்கின்றன. தொலைக்காட்சியில் சில நாடகங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, உணர்ச்சி வசப்பட்டு அழுதுவிடுகிறேன். அவை நாடகம் - பணத்[illegible]கள் என்று தெரி[illegible] உணர்ச்சி வசப்படுகின்றேன். சிறிது காலம் மனோவியல் சிகிச்சை எடுத்து ஓரளவு நல்லாயிருந்தேன். சிகிச்சை அளித்த மருத்துவர் - நான் குணமடைந்து விட்டேன் என்று மருந்துகளை நிறுத்திவிட இப்பொழுது எனக்கு - தேவையற்ற சிந்தனைகள் ஏற்படுகின்றன. என்னையறியாமலே கண்ணீர் சிந்துதல், சிறிய விடயங்களுக்கும் பெரிதாக கவலை கொள்ளுதல் போன்ற கோளாறுகள் ஏற்பட்டுள்ளன. மருத்துவர் திரும்பவும் மருந்துகளை உபயோகிக்கச் சொல்கிறார். மருந்தில்லாமல் எனக்கு வேறுபரிகாரம் இல்லையா?

**பதில்:** உங்கள் பிரச்சினையின் அடிப் படையை, நீங்கள் கூறிய 'எனக்கு கிடைக்கவேண்டிய பதவி உயர்வு கிடைக்காமல் போனபின்' என்ற வாக்கியத்திலிருந்து அறிய முடிகிறது. உணர்வுகள், மனவெழுச்சிகள், எண்ணங்கள், நம்பிக்கைகள் - உங்கள் பதவியுயர்வு கிடைக்காமல் போன விஷயத்தோடு சம்பந்தப்பட்டவை. தொலைக்காட்சி நாடகங்களைப் பார்க்கும் போது ஏற்படும் உணர்ச்சிவயப்படுதல், நீங்கள் உள்மனதில் - நீங்கள் பெற்ற அனுபவத்தை - நீங்கள் பார்க்கும் காட்சிகளோடு தொடர்புபடுத்துவதால் ஏற்படுகிறது. உங்கள் தொழில் உயர்வு கிடைக்காததால் ஏற்பட்ட இன்னல் (DISTRESS), அவமானம் (SHAME) மற்றும் விரக்தி (FRUSTRATION) என்ற உணர்வுகளால் ஆட்கொள்ளப்படுகின்றீர்கள். உங்களைப் போல் சிலருக்கு ஒரு துறையில் பெரும் வெற்றி என்பது வாழ்க்கையின் முக்கியமான விஷயம் - அதைவிட பெரிய விஷயம் இல்லை - என்ற எண்ணம் ஓங்கி

[illegible]
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம் பதில் தருகிறார்.
ஒஇவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இருக்கின்றது. சகல துறைகளிலும் வெற்றி காண்பது என்பது இலட்சிய வெறியாகி விடுகிறது. சிறிய தோல்வி கூட உங்களை துவளவைத்து விடுகிறது. நண்பர் லேனா தமிழ்வாணன் கூறியதுபோல் ''எறும்புக் கடிக்கெல்லாம் குதிப்பதை விட்டு, பாம்பு கடிக்கெல்லாம் நாம் பழகிக் கொள்ளவேண்டும்''. வாழ்க்கை என்பது எதிலும் வெற்றி பெறுவதில் தங்கியிருப்பதில்லை என்பதை மனதில் கொள்க. நடிகர் சந்திர பாபுவின் பாடல் வரியில் வருவது போல 'வெற்றி பெற்ற மனிதரெல்லாம் புத்திசாலியில்லை' என்பதை நினைவில் நிறுத்துங்கள். வாழ்க் கையில் மகிழ்ச்சி என்பது வாழ்க்கையில் திருப்தி என்பது வெற்றிகளால் மட்டும் வருவதில்லை. மகிழ்ச்சி என்பது மனதினது ஒரு நிலை (STATE OF MIND). அது வெளிச் சூழலினால், சம்பவங்களினால் பாதிக்கப்படாதது. எமக்கும் எமது சக்திக்கும் அப் பாற்பட்ட சில சம்பவங்கள் இந்த நிலையை பாதிக்கும் போது எமது உணர்வுகளையும், மனத்தையும் திடப்படுத்திக்கொள்ள [illegible]கொள்ளவேண்டும். EMOTIONAL INTELLIGENCE என்கின்ற மனோவியல் அடிப்படையில்-விசேட மனோவியல் நிபுணர் - (CLINICAL PSYCHOLOGIST) ஒருவரின் ஆலோசனையைப் பெற்றால் - உங்கள் பிரச்சினை கட்டாயம் தீரும்.

* * *

**கேள்வி:** பெண் வயது 23. சமீபத்தில் எனக்கு திருமணம் நடக்கவிருக்கின்றது. ஆனால், உடனடியாக குழந்தை பெற விருப்பமில்லை. ஒன்றிரண்டு வருடங்களுக்கு குழந்தை பெறுவதை தள்ளிப் போடவிரும்புகின்றேன். அதற்காக கருத் தடை மாத்திரைகளை உபயோகிக்கலாம் என்று எண்ணுகின்றேன்., எப்பொழுது இந்த மாத்திரைகளை உபயோகிக்க வேண்டும். அதற்கு முன்னர் ஏதாவது வைத்திய பரிசோதனைகள் செய்யப் படவேண்டுமா? எப்போது வைத்திய ஆலோசனை பெறப்படவேண்டும் என்பதை விளக்கமாக தருவீர்களா? எனக்கு கடைசியாக 30 நாட்களுக்கு முன்னர் மாதவிலக்கு வந்தது.

**பதில்:** முதலில் நீங்கள் திருமணத்திற்கு முன்னர்-அனுபவம் உள்ள பெண்நோயியல் (GYNAECOLOGIST) நிபுணரின் ஆலோசனையைப் பெற வேண்டும். அவர் உங்களை பரிசோதித்து, உங்கள் பழைய நோய் நொடிகள் பற்றி விசாரித்து, முக்கியமாக உங்கள் பெற்றோரின் உடல்நலம், நோய் பற்றிய விஷயங்களை அறிந்து, உங்களுக்கு ஏற்ற கருத்தடை வழிமுறை பற்றிய உளவள ஆலோசனைகளை (COUNSELLING) தருவார்.

கருத்தடை மாத்திரைகள் தொடர்ந்து 21 நாட்களுக்கு எடுக்கப்பட வேண்டும். அடுத்து 7 நாட்களுக்கு Placebo அல்லது இரும்புச்சத்து மாத்திரைகள் அந்த பைக்கெட்டில் இருக்கும். கிரமமாக தொடர்ந்து 28 நாட்களுக்கு - ஒருநாள் கூடத் தவற விடாமல் மாத்திரைகளை உபயோகிப்பதற்காக இந்த ஏற்பாடு. தினமும் ஒரு மாத்திரை - ஒரே நேரத்தில் - இரவில் உணவுக்கு பின்னர் எடுக்க வேண்டும் என்பது விரும்பத்தக்கது. PLACEBO என்கின்ற வெற்று மாத்திரைகளை அல்லது இரும்புச்சத்து மாத்திரைகளை உபயோகிக்கும்போது மாதவிலக்கு ஏற்படும். கிரமமாக உபயோகித்து வந்தால் - மாதவிலக்கு ஏற்பட்டாலும், ஏற்படாவிடிலும் 28 மாத்திரை - திட்டம் (28 DAYS COURSE) முடிந்ததும் அடுத்த பைக்கெட் கருத்தடை மாத்திரைகளை தொடங்கவேண்டும். ஏதாவது காரணத்தால் ஓரிருதினங்கள் மாத்திரையை எடுக்காவிட்டால் மாத்திரை திட்டம் முடிந்ததும் மாதவிலக்கு வரும்வரை காத்திருக்க வேண்டும். அதன் பின்னர்தான் அடுத்த மாத்திரைத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். மாதவிலக்கு காணப்படாவிடில் - கருத்தரித்திருக்கின்றதா என்பதற்கு PREGNANCY TEST செய்த பின்னரே - கருத்தடை மாத்திரைக்ளை உபயோகிக்க வேண்டும்.

கருத்தடை மாத்திரைகளை அசாதாரண யோனிவழி இரத்தப்பெருக்கு உள்ளவர்கள், இருதயநோயாளர்கள், நீரிழிவு நோயுள்ளவர்கள், ஈரல் சம்பந்தமான நோயாளர், உள்நாண் அடைப்பு நோய் (DEEPVEIN THROMBOSIS) உள்ளவர்கள், கால்கைவலிப்பு (EPILEPSY) நோயாளர், பாரிசவாதநோய் உள்ளவர்கள், மார்பகப் புற்றுநோயாளர், மனஅழுத்த (DEPRESSION) நோயாளர், ஒற்றைத் தலைவலி (MIGRAINS) நோயாளர் உபயோகிக்கக் கூடாது. கருத்தடை மாத்திரை உபயோகிப்பவர்களுக்கு எடை அதிகரிப்பு, வயிற்றுப்பிரட்டல், தலைவலி, வயிற்று உட்பிசம், வயிற்றுவலி, பார்வைக் கோளாறு போன்ற - பக்க விளைவுகள் மிகவும் அரிதாக ஏற் படலாம். எதற்கும் நான் முன்னர் அறிவுறுத்தியபடி, ஒரு பெண் நோயியல் நிபுணரின் ஆலோசனையைக் கட்டாயம் பெறவும்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்மாற்றம்

இல.75(121), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கடந்த பல வருடங்களாக இயங்கிவந்த நிஷானந்தா ஜீவல்லறி ஆகிய எமது ஸ்தாபனம் எதிர் வரும் 06.05.2009 புதன்கிழமை தொடக்கம் இல.06, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கபிலா பாட்டா அருகில்) எனும் புதிய முகவரியில் இயங்கவுள்ளது என்பதை எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

எமது புதிய முகவரி:-
நிஷானந்தா ஜீவல்லறி,
இல.06, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கபிலா பாட்டா அருகில்)
தொ.பே:- 222 7985


## முன்பள்ளிக்கு உதவி

மானிப்பாய்,மே.04

முன்பள்ளி மாணவர்களின் போஷாக்கை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் நவாலி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த முன் பள்ளிக்கு வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் முதற் கட் டமாக போஷாக்கு உணவை வழங்கியுள்ளார்.

கடந்த வாரம் முதல் 'போரூட்' நிறுவன அனுசரணையுடன் போஷாக்கு [illegible]ட்ட மும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. (203-95)

## போயிட்டிக் கிராமத்தில்வாழ்வாதாரத் திட்டம்

கோப்பாய்,மே.04

நீர்வேலி போயிட்டி பகுதி மக்களின் வாழ்வாதாரத் திட்டத்தினை மேம்படுத்தும் நோக்குடன் 'வேல்ட் விஷன்' நிறுவனம் 15 பேருக்கு நல்லின ஆடுகளை வழங்கியுள்ளது. மேலும் 6 பேருக்கு நல்லின கறவைப் பசுக்களும் வழங்கி உள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை-இப்பகுதியில் 'நிஷா' புயலினால் பாதிப்புற்ற 40 வீடுகளுக்கு மீள் புனரமைப்புச் செய்வதற்கு கூரைத் தகடுகளையும் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (203-72)





ராஜாதி ராஜ
ராஜகம்பீர ராஜமார்த்தாண்ட
லக்கிலாண்ட் பிஸ்கட் மன்னன்
குடும்பத்துடன்
யாழ்.நகர் வாரார்! வாரார்!! வாரார்!!!
நீண்டகால இடைவெளியின் பின் மீண்டும்

யாழ்.நகரில் அழகிய வர்ணப் பைக்கட்டுக் களில் தரத்தில் அதிஉயர்ந்த, விலையில் மிகக்குறைந்த, இலங்கையில் முதல்தர பிஸ்கட்டாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தரம் கொண்ட, லக்கிலாண்ட் பிஸ்கட் தற்போது யாழ்.நகரில் நீங்கள் வாங்கிடலாம். விருந்தினர் வீட்டுக்கு வெறும் கையுடன் செல்லுவதா? விருப்பமுடன் எடுத்துச் செல்லுங்கள். வி[illegible]லயில் மலிந்து, தரத்தில் சிறந்து, சுவையில் சுந்தரமாய் திகழும் லக்கி லாண்ட் கிவ[illegible] பிஸ்கட் வகைகள்.

லக்கிலாண்ட் உற்பத்திகளோ பல நீங்கள் அறிந்திட அவற்றிற் சில

லக்கிலாண்ட் கிப்ட் வகைகள்
லக்கிலாண்ட் லெமன் பஃவ்
லக்கிலாண்ட் லெமன் கிறீம்
லக்கிலாண்ட் போர் பொன் சொக்லட் கிறீம்
லக்கிலாண்ட் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் பட்டர் கெரோல்
லக்கிலாண்ட் கஸ்ரட் கிறீம்
லக்கிலாண்ட் மாரி, ஜின்ஜர்,நைஸ்
லக்கிலாண்ட் சோட்டீஸ்
லக்கிலாண்ட் பூ, ஜெம் (Gem) என்னும் பல

Manufactured By:
Luckyland
Biscuit Manufactures
Kundasale, Kandy,
Srilanka.

ஏக விநியோகஸ்தர்கள் : சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி.021 222 2567


# ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
ஆனாச்சி
பொன்னுக்கோன்

மண்ணில் மலர்ந்தது
07.04.1913

விண்ணில் கலந்தது
04.05.2008

மரணம் என்பது மறுக்கப்படாத உண்மை, மறக்கப்படாத துயரம்.
இருப்பினும் எல்லோரும் வான்வீட்டில்
சேருவோம் என்பது எம் நம்பிக்கை
அம்மா! இன்று எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றுவிட்டது
அன்பும் பண்பும் தியாகமும் நிறைந்த உங்கள்
வாழ்வு என்றும் எம் நினைவில் இருக்கும்
நினைவில் எம்முடனும் நிஜத்தில் இறைவனிடத்திலும்
கலந்திருக்கும் உங்கள் ஆன்மா அமைதியடையப் பிரார்த்திக்கின்றோம்.

"நீர் தேர்ந்தெடுத்து உம்மருகில் வைத்துக்கொள்ளும் மனிதர் பேறு பெற்றோர்" திபா. 65.04

(84773)

கோவிற்குடியிருப்பு,
சாவகச்சேரி.

நீங்காத நினைவுகளோடு:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# ராசி பலன்

04-05-2009 முதல்
10-05-2009 வரை

பொ.சந்திரலிங்கம்

## மேஷம்



அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்காது.

## இடபம்



கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர்,அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளில் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

## மிதுனம்



மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர். மன அமைதி இருக்கும்.

## கடகம்



புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## சிம்மம்



மகம், பூரம், உத்தரம் 1

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

## கன்னி



உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக எண்ணம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.


## துலாம்



சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்காது.

## விருச்சிகம்



விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## தனுசு



மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## மகரம்



உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர். மன அமைதி இருக்காது.

## கும்பம்



அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியத் தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு தாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.

## மீனம்



பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறரை மணிநேர உண்ணாவிரதமும் ஆறுதல் அளிக்காத நிகழ்வுகளும்

27.04.2009 அன்று தொலைக்காட்சிகளில் காலைச் செய்திகளைப் பார்த்த தமிழக மக்களுக்கு ஆச்சரியத்தை அளித்தது, அந்தச் செய்தி.

'இலங்கையில் உடனடியாக போரை நிறுத்த வலியுறுத்தி முதலமைச்சர் கருணாநிதி காலவரையற்ற உண்ணா விரதம்.' - இதுதான் அந்தச் செய்தி.

'காலதாமதமான உச்சபட்ச முயற்சி என்றாலும், தி.மு.க. தலைவரின் முனைப்பைப் பாராட்டியே ஆக வேண்டும்' என்று மக்களில் ஒரு தரப்பினர் கருத்துத் தெரிவிக்கத் தொடங்கினர். 'எல்லாம் முடிந்துவிட்டதே. இப்போது இது தேவையா?' என்ற ஏமாற்றம் கலந்த கோபக்குரல் மற்றொரு புறம்.

சென்னை மெரினா கடற்கரையிலுள்ள அண்ணா நினைவிடத்தில் 27ஆம் திகதி காலை 6.10 மணிக்கு உண்ணா விரதப் போராட்டத்தைத் தொடங்கிய கருணாநிதி, ''இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்கும் மகிழ்ச்சியான தகவல் வரும் என நேற்று இரவு வரை எதிர்பார்த்திருந்தேன். ஆனால் எந்தத் தகவலும் வரவில்லை. விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்தை அறிவித்து விட்டனர். ஆனால், அதை இலங்கை அரசு நிராகரித்துவிட்டது. இலங்கை அதிபர் ராஜபக்ஷ, பல தமிழர்களின் உயிர்களைப் பலியாக்கி இருக்கிறார். அவர்களோடு சேர்த்து என் உயிரையும் பலி கொடுக்கிறேன். என்னுடன் தி.மு.கவினர் எவரும் உண்ணா விரதம் இருக்க வேண்டாம். நான் மட்டுமே இந்த உண்ணாவிரதத்தை மேற்கொள்ள விரும்புகிறேன்,'' என்றார்.

*தலைவரின் கட்டளை... உரிமையோடு மீறல்!*

'தலைவர் உண்ணாவிரதம் இருக்க, நாங்கள் சும்மா இருப்பதா?' என்றபடி, தலைவர் கருணாநிதியின் அன்புக் கட்டளை மீறப்பட்டது. மதுரையில் மு.க.அழகிரி தலைமையிலும், திருச்சியில் கே.என்.நேரு தலைமையிலும், திருவாரூரில் அமைச்சர் மதிவாணன் தலைமையிலும், புதுக்கோட்டையில் மத்திய அமைச்சர் ரகுபதி தலைமையிலும், தமிழகத்தின் முக்கிய இடங்களில் தி.மு.க. வின் ஏனைய நிர்வாகிகள் தலைமையிலும்



தொண்டர்கள் பலர் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் எவ்வித செயல்களிலும் ஈடுபடக் கூடாது என்று கருணாநிதி கேட்டுக் கொண்ட போதிலும், உண்ணாவிரதப் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட பொள்ளாச்சி, புதுக்கோட்டை, ஈரோடு, மதுரை உள்ளிட்ட இடங்களில் பஸ் சேவை நிறுத்தம், கடைகள் அடைப்பு என ஆங்காங்கே இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும் வகையில் சம்பவங்கள் பதிவாகத்தான் செய்தன.

*முடிவுக்கு வந்த உண்ணாவிரதம்!*

உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்ற காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் விடுத்த வேண்டுகோளை நிராகரித்த தமிழக முதலமைச்சர், ''ஈழத்தில் நடக்கும் போரை உடனடியாக நிறுத்த வேண்டும். ஈழத் தமிழர்களுக்காக என்னையே நான் அர்ப்பணித்துக் கொள்கிறேன்,'' - என்று உணர்வுபூர்வமாக எடுத்துரைத்தார்.

*நண்பகல் 12.30...*

தி.மு.க. நிர்வாகிகளும், பல்வேறு கட்சித் தலைவர்களும் வருகை தந்து கருணாநிதியின் முயற்சிக்கு ஆதரவு தெரிவித்தவண்ணம் இருந்த நிலையில்; மதியம் 12.30 மணியளவில் தொலைபேசி யில் தகவல் ஒன்று வந்தது. அதைத் தொடர்ந்து ஓர் அறிக்கையை வாசித்தார் கருணாநிதி.

''இலங்கை அரசின் பாதுகாப்புச் சபை கூட்டம் இன்று காலை நடந்தது. அதில், போரை நிறுத்திக் கொள்வது என்று முடிவு எடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, இலங்கையில் ராணுவத்தினர் எவ்வித தாக்குதல் நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல், பாதிக்கப்பட்ட தமிழ் மக்க ளுக்கு நிவாரணப்பணிகள் மேற்கொள்வர் என்ற அதிகாரப்பூர்வத் தகவல், உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் மூலம் கிடைத்துள்ளது,'' என்றார் கருணாநிதி.

இதைத் தொடர்ந்து, போரை நிறுத்த வேண்டும் என்ற தனது வலியுறுத்தல் நிறைவேற்றப்பட்டு விட்டதால், இந்த வெற்றிகரமான உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்வதாக கூறிய கருணாநிதி, 12.40 மணிக்கு அண்ணா நினைவிடத்தில் இருந்து வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார்.


*இலங்கையில் போர் நிறுத்தமா?!*

காலவரையறையற்ற போராட்டத்தை மேற் கொண்ட முதலமைச்சர் கருணாநிதி, இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படுவதாகத் தகவல் வந்துள்ளதாகக் கூறி, தொண்டர்களின் கரகோஷத்துக்கிடையே தனது ஆறரை மணி நேர உண்ணா நோன்பை முடித்துக் கொண்டார்.

அதன்பின்பு, தொலைக்காட்சிகளிலும் இணையத் தளங்களிலும் செய்திகள் வெளியாக, இலங்கை அரசு தரப்புச் செய்திகளை கேட்டவர்களுக்கு அதிர்ச்சியே காத்திருந்தது.

இலங்கை அதிபர் ராஜபக்ஷவின் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், ''போர் நடவடிக்கைகள் அவற்றின் முடிவை எட்டியிருப்பதாக இலங்கை அரசு தீர்மானித்துள்ளது. பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கனரக ஆயுதங்கள் மற்றும் போர் விமானங்களை பயன்படுத்து வதையும் ஆகாய மார்க்கமான தாக்குதல்களையும் முடிவுக்குக் கொண்டுவருமாறு பாதுகாப்புப் படையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பணயமாக வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை மீட்கும் நடவடிக்கைகளோடு பாதுகாப்புப் படையினர் தங்களது நடவடிக்கைகளை மட்டுப்படுத்திக் கொள்வதோடு, பொதுமக்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மிகுந்த முன்னுரிமை வழங்குவர்,'' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.




இலங்கையில் முழுமையான போர் நிறுத்தம் அறிவிக்கப்படவில்லை என்பது உறுதியானது!

*தொடரும் தாக்குதல்!*

தமிழர்களுக்கு எதிராகக் கனரக ஆயுதங்கள், விமானத் தாக்குதல் போன்றவை நடத்தப்பட மாட்டாது என்று இலங்கை அரசும், ராணுவமும் வாக்குறுதி அளித்த சில மணி நேரங்களிலேயே அது மீறப்பட்டு, இரண்டு போர் விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதாக விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர்.

இதுகுறித்து விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் கூறுகையில், ''பிற்பகல் 12.50 மணியளவில் முள்ளிவாய்க்கால் பகுதியில் மக்கள் உள்ள இடங்களைக் குறி வைத்து இரண்டு போர் விமானங்கள் குண்டு வீசித் தாக்கின. அதேபோல, 1.10 மணிக்கு இன்னொரு முறை விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

கனரக ஆயுதங்கள், விமான தாக்குதல்களை நடத்த மாட்டோம் என அறிவித்த இலங்கை அரசு அதை மீறும் வகையிலும், உலக சமுதாயத்தையும், குறிப்பாகத் தமிழக மக்களையும் ஏமாற்றும் வகையில் விமானத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.



மேலும், பாதுகாப்பு வலயப் பகுதியில் இலங்கை ராணுவம் தொடர்ந்து எறிகணைகளை வீசித் தாக்கி வருகின்றது. வலைஞர்மடப் பகுதியிலும் தாக்குதல் தொடருகிறது,'' இப்படிப் புலித்தேவன் கூறியுள்ளதாக இலங்கையில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

*ஆறுதலளிக்காத நிகழ்வுகள்!*

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்ட பிறகும், இலங்கையில் இன்னும் போர் நிறுத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படாதது, தமிழக மக்களுக்கு மட்டுமின்றி, உண்ணாவிரதத்தைக் கைவிட்ட முதலமைச்சர் கருணாநிதிக்கே கவலையளித்திருக்கும்.

அண்மைக்காலமாகவே இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி.மு.க. பெரும் பின்னடைவைச் சந்தித்திருப்பது வெளிப்படையாகத் தெரிந்ததே.

கடந்த ஆண்டு செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களிலேயே, தாம் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் அரசை வலியுறுத்தும் நடவடிக்கையோடு, ஆதரவைத் திரும்பப் பெற்றுக் கொள்வோம் என்று தி.மு.க. நெருக்கடி கொடுத்திருக்க வேண்டும். ஆனால், சில நிர்ப்பந்தங்கள் காரணமாக அப்படியொரு முடிவை தலைமையால் எடுக்க முடியாமல் போனது.

அதைத் தொடர்ந்து, இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட தி.மு.க. மேற் கொண்ட பல்வேறு போராட்டங்களையும், காங்கிரஸ் அரசு ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. இதனால், அக்கட்சி மீது மக்களிடையே அதிருப்தி நிலவியது. தி.மு.க.வின் ஒவ்வொரு முயற்சியிலும் அந்த அதிருப்தி அதிகரித்ததே தவிர, கொஞ்சமும் நற்பெயரை ஈட்டித்தரவில்லை.

இதை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட அ.தி.மு.க.வும், அதன் கூட்டணிக் கட்சிகளும் தேர்தல் பிரசாரத்தில் தி.மு.க.வை புரட்டி எடுக்கின்றன.

தனித் தமிழ் ஈழம் தான் தீர்வு என்ற அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவின் பேச்சு, தமிழக அரசியலில் சலசலப்பை ஏற்படுத்த, அந்த நிலைப்பாட்டால் தமது கட்சிக்கு எதிரான அலை மேலும் மிகுதியாக வீசுமோ என்ற அச்சத்திலேயே கருணாநிதி உண்ணா விரத திட்டத்தை செயல்படுத்தினார்,' என்று அரசியல் நோக்கர்கள் சிலர் கருத்து தெரிவிக்கின்றனர்.

இந்த உண்ணாவிரத போராட்டமும் அதன் முடிவும் கூட, இலங்கைத் தமிழரைக் காப்பாற்றுவதற்கு உகந்ததொரு முயற்சியாக இல்லாமல் போய்விட்டதால், தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு இது ஒரு ஆறுதலற்ற நிகழ்வாக இருந்திருக்கக் கூடும்.

மற்றொரு வகையில், தேர்தலை மையமாகக் கொண்டே உண்ணாவிர்த நாடகமும் அரங்கேறியிருப்பதாக எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டையும் மக்களால் நம்பாமல் இருக்க முடியாத நிலை.

அண்மையில் நடந்து முடிந்த பொது வேலைநிறுத்தப் போராட்டத்தைப் போலவே, ஆறரை மணிநேர உண்ணாவிரதப் போராட்டமும் மக்களுக்கு தி.மு.க. தலைமை மீது அதிருப்தியை அதிகரிக்கச் செய்யும் ஓர் ஆறுதலளிக்காத நிகழ்வாகவே ஆகியுள்ளது என்பது நடுநிலையாளர்களின் கருத்து! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## கிளைக்குழு தெரிவுக்கான அறிவித்தல்

## 10.05.2009 ஞாயிற்றுக்கிழமை

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 11.11.2005 ஆம் திகதி 1419 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு மேற்படி சங்கத்தின் துணை விதி 23இன் ஏற்பாட்டின்படி வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் அவர்களால் ஆக்கப்பட்டு 19.05.1998ஆம் திகதி 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான ''வடக்கு-கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான விதிகள்'' இன் ஏற்பாடுகளுக்கு அமைய தெல்லிப்பழை பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் எல்லாக் கிளைகளுக்குமான கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களை நடத்துவதற்காக மேற்படி விதிகளின் பிரிவு 06இன்படி அக்கூட்டங்கள் நடைபெறுவதற்கான கால அட்டவணைகள் பின்வருமாறு என்னால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி உபவிதியின் பிரிவு 07இன்படி அக்கூட்டங்களை அழைப்பதற்கும், அதன் தவிசாளராக கடடையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களுக்கு அதிகாரமளித்து நியமித்துள்ளேன் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்த அறிவித்தல் தொடர்பாக ஒவ்வொரு கிளையின் பொதுச்சபைக்கு வந்து வாக்களிக்கத்தகுதியுள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் அனேகமான அங்கத்தவர்கள் இடப்பெயர்வு காரணமாக வேறு இடங்களில் வசிப்பதால் இந்த அறிவித்தலை தமக்கு வழங்கப்பட்ட தனித்தனி அறிவித்தலாக ஏற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட தங்களது கிளைக்குரிய கூட்டம் நடைபெறும் இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| 10.05.2009 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி | 10.05.2009 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணி | கிளைப் பொதுச்சபை கூட்டத்தின் தவிசாளர் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடத்தப்படும் இடங்கள் |
|---|---|---|---|
| கிளை 01 | கிளை 09 கீரிமலை | பா.கலைச்செல்வி | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| தெல்லிப்பழை | கிளை 13 அரசடி வீதி மாவிட்டபுரம் | க.பாலகிருஸ்ணன் | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 12 மாவிட்டபுரம் | கிளை 41 கிளானை | இ.பாலச்சந்திரன் | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 14 கொல்லன்கலட்டி | கிளை 25 மயிலிட்டி கிழக்கு | வே.பிரதீஸ்குமரன் | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 02 துர்க்காபுரம் | கிளை 29 வீமன் காமம் | வி.ஜெயந்தன் | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 28 பளை வீமன்காமம் | கிளை 31 ஊறணி | சி.சிறிதரன் | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 30 தையிட்டி | கிளை 38மாங்கொல்லை | க.கமலநாதன் | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 35 கலட்டி | கிளை 26 மயிலிட்டி வடக்கு | சு.தர்சினி | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 33 மடத்தடி | கிளை 37 ஊரங்குனை | அ.விமல்ராஜ் | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 27 காங்கேசன்துறை | கிளை 08 இளவாலை | சி.குணாளன் | பிரதேச செயலகம் வலி.வடக்கு, தெல்லிப்பழை. |
| கிளை 34 ஆஸ்பத்திரியடி | கிளை 07 கருகம்பனை | க.திசாகரன் | யா/இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம். |
| தெல்லிப்பழை | கிளை 06 விழிசிட்டி | வை.கயிலைநாதன் | யா/இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம். |
| கிளை 44 மயிலங்கூடல் | கிளை 11 காங்கேசன்துறை | பா.சிறீகுமார் | கிளை 43 இன் கட்டடம் சீந்திப்பந்தல், இளவாலை. |
| கிளை 36 வசந்தபுரம் | - நடேஸ்வராக் கல்லூரியடி | வி.சிவகுமார் | கிளை 03 இன் கட்டடம் வவுணாவத்தை, தெல்லிப்பழை. |
| கிளை 43 சீந்திப்பந்தல் | கிளை 15 வறுத்தலை விளான் | செ.செல்வகுமாரன் | துர்க்காபுரத்தில் அமைந்துள்ள லயன்ஸ்கழக மண்டபம். |
| கிளை 03 வவுணாவத்தை | கிளை 32 பலாலிச் சந்தி | பொ.கோகுலன் | கிளை 5 இன் கட்டடம் பன்னாலை. |
| கிளை 04 வராங்கொடை | கிளை 24 மயிலிட்டி கரை | ந.பத்மசோதி | துர்க்காபுரத்தில் அமைந்துள்ள லயன்ஸ் கழக மண்டபம் |
| கிளை 05 பன்னாலை | கிளை 22 பலாலி மத்தி | வீ.இரத்தின காந்தன் | துர்க்காபுரத்தில் அமைந்துள்ள லயன்ஸ் க்ழக மண்டபம் |
| கிளை 10 கரும். சிமெந்து | கிளை 23 பலாலி கிழக்கு | ச.பாலகுமார் | சுனாமி புனர்வாழ்வு வீட்டுத் திட்டம் புலோலி மத்தி, பருத்தித்துறை. |
| -தொழிற்சாலை | கிளை 40 குரும்பசிட்டி கிழக்கு | க.நிமலன் | நலன்புரிச்சங்க மண்டபம் 4 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை. |
| கிளை 16 கட்டுவன் | கிளை 18 வசாவிளான் | அ.சீராளன் | வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், உரும்பிராய். |
| கிளை 42 திருப்பூர் மயிலிட்டி | | சு.கணேஸ் | யா/ ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் |
| கிளை 19 ஒட்டகப்புலம் | | ரி.என்.ராஜா | வசாவிளான் கிழக்கு குட்டியப்புலம் கிளை 39 |
| கிளை 21 பலாலி மேற்கு | | ச.சசீந்திரன் | வசாவிளான் கிழக்கு குட்டியப்புலம் கிளை 39 |
| கிளை 39 குட்டியப்புலம் | | அ.தயாளன் | வசாவிளான் கிழக்கு குட்டியப்புலம் கிளை 39 |
| கிளை 20 வசாவிளான் மத்தி | | அ.தயாளன் | வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், உரும்பிராய். |
| கிளை 17 குரும்பசிட்டி | | | |

**24.04.2009**

## குறிப்பு: 1கிளைக்குழுத் தெரிவு தொடர்பான முக்கிய விதிகள்.

★ கிளைப் பொதுச் சபைக்கூட்டத்திக்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகம் அளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1 /4) பங்கினர் அல்லது இருபத்தைந்து பேர் எது குறைவோ அத்தொகையாகும்.

★ தவிசாளர் குறித்த கிளையில் பொதுச் சபையில் இருந்து கிளைக்குழுவுக்கான (9) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இவர்களில் ஆகக்குறைந்தது இருவர்(2) 18வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

★ சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் ஒன்பது பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.

★ இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளருக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்து திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

★ தெரிவுசெய்யப்பட்டவர்கள் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச் சபையில் பிரகடனப்படுத்துவதுடன்,சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

## கிளைக் குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படத் தகுதியற்றவர்கள்

01. கிளையினது வாக்காளர்ப்பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்
02. 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள்
03. உடன் முன்சென்ற 3 ஆண்டுகளுக்குள் தீய ஒழுக்கச் செயலுக்காக குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டவர். அல்லது 3 மாதங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனைக்கு தீர்ப்பளிக்கப்பட்டவர்.
04. கடனைத் தீர்க்க வகையற்றவர் என பிரகடனம் செய்யப்பட்டவர். அல்லது அவ்வாறு ஒரு வழக்கல் தீர்ப்பளிக்கப்பட்டவர்.
05. இச் சங்கத்திற்கு அல்லது பதிவு செய்யப்பட்ட வேறு எக் கூட்டுறவுச் சங்கத்திற்கு எக் கடனையாவது திருப்பி கொடுக்காதவர் அல்லது வேறு எந்த விதத்திலும் [illegible] செய்தவர்.
06. இச் சங்கத்தில் வியாபாரி எனப் பதிவு செய்யப்பட்டவர். அல்லது சங்கத்தின் நலவுரிமைக்கு முரண்பட்டவகையில் ஒரு வியாபாரத்தை நடத்துபவர் .
07. சங்கத்தில் ஆதாயம் கருதி ஏதாவது ஒரு பகுதியை அல்லது இடத்தினை வகிப்பர். அல்லது ஆணையாளரின் முன்அனுமதி இன்றி ஏதாவது தகைமைக் கொடையைப் பெறுபவர்.
08. இச் சங்கத்தில் அல்லது இச் சங்க உறுப்புரிமை வகிக்கும் வேறு எந்தச் சங்கத்திலும் ஊதியம் பெறும் ஊழியராக இருப்பவர்.
09. ஓர் உறுப்பினர்என்ற முறையில் தவிர மற்றப்படி சங்கத்திடம் செய்யப்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தத்திலோ அல்லது சங்கத்தினால் செய்யப்படும் எந்த விற்பனையிலோ,கொள்வனவிலோ,அல்லது சங்கத்தின் நிதியோடு சம்பந்தப்பட்டு அதனால் செய்யப்பட இருக்கும் அல்லது பேச்சளவில் இருக்கும் ஏதாவது ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கல்களில் மறைமுகமாகவோ, நேர்முகமாகவோ அக்கறை கொண்டிருப்பவர்.
10. கூட்டுறவுச் சட்டத்தின் படி இயற்றப்பட்ட விதிகளுக்கு அமைய தமது பதவியை அல்லது வேலையை கடந்த ஐந்து ஆண்டுகளில் விட்டகல வேண்டிய நிலைக்கு ஆளானவர்.
11. நாடாளுமன்ற உறுப்பினர்கள்,மாகாண சபை உறுப்பினர்கள்,மாநகர சபை உறுப்பினர்கள்,பிரதேச சபை உறுப்பினர்கள்
12. அங்கத்தவர்களாக சேர்ந்து ரூபா100.00ஐப் பங்குப்பணமாக செலுத்தி முடிக்காதவரும், அங்கத்தவராக சேர்ந்து ஒரு வருடம் பூர்த்தியாகாத வருமான ஒருவர்
13. இயக்குநர் சபையினால் அல்லது கிளைநிர்வாக சபையினால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாத அல்லது மேல்முறையீடு இயக்குநர் சபையினால் அல்லது கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் பிரிவு 6 (2) இன்கீழ் ஆணையாளரால் மீளாய்வு மூலம் அல்லது விரிவு 2:4 அல்லது 2:6 இன் கீழ் வாக்காளர் அட்டவணையில் பெயர் சேர்க்கப்படாத ஒருவர். (சங்கத்தின் துணை விதிப் பிரிவு இல. 22(1))

**பொ.சிவலிங்கம்,**

**கூ.அ.உ. ஆணையாளர், யாழ்ப்பாணம்.**

(C/558311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச ஊடகவியலாளர் தினத்தை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக ஊடகவளங்கள் மையத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.
வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கப் பணிமனைக்கென ஊடக வளங்கள் நிலையம் வழங்கிய அலுவலகத்தை ஊடகவளங்கள் நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை திறந்து வைப்பதையும் அருகில் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம். மறைந்த பத்திரிகையாளர்களின் உருவப்படத்தை ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் எஸ்.பெருமாள் திரைநீக்கம் செய்து வைப்பதை இரண்டாவது படத்திலும் மூத்த பத்திரிகைப் படப்பிடிப்பாளரான எஸ்.கதிரவேலுவை அரச சார்பற்ற இணையங்களின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராஜா உரையாற்றுவதை நான்காவது படத்திலும் பத்திரிகையாளர் சங்கம் நடத்திய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்ற கே.இராஜகோபாலுக்கான பரிசினை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் எஸ்.யோகராஜா வழங்குவதை ஐந்தாவது பத்திலும் காணலாம்.

# அரசியல் பரப்பில் மட்டுமல்லாது பல்வேறு துறைகளிலும் சிறந்த ஊடகவியலாளர்கள் உருவாக வேண்டும்

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கருத்து

யாழ்ப்பாணம், மே 4

ஊடகத்தில் அரசியல் பரப்பு மட்டுமல்லாமல் சமூக, பொருளாதார, கலை, கலாசார, அபிவிருத்தி, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு பரப்புக்கள் உள்ளன. அரசியல் பரப்பு மட்டுமன்றி பல்வேறு துறைசார்ந்த பரப்புக்களில் சிறந்த ஊடகவியலாளர்கள் உருவாக வேண்டும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை யாழ். ஊடக வளங்கள் பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச ஊடகவியலாளர் தின நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேலும் பேசுகையில் கூறியவை வருமாறு:

யாழ்ப்பாணத்தில் இன்று ஊடகவளங்கள் பயிற்சி நிலையம், வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம், பாடசாலைகளில் ஊடகக் கல்வி, யாழ்.பல்கலைக்கழகத்தில் ஊடகப் பட்டப்படிப்பு என அனைத்துமே ஒன்று சேர சங்கமமாகியுள்ளன. இது யாழ்ப்பாணத்து ஊடகத்துறைக்கு ஒரு வரப்பிரசாதமாகும். சர்வதேச ஊடக தினத்தில் இப்பின்புலங்கள் முன்மாதிரியாகும்.

சர்வதேச ரீதியாக ஊடகம் இன்று முக்கிய பங்கை வகிக்கிறது. அவை மக்களின் வாழ்க்கையுடன் ஒன்றிணைந்துள்ளன. நல்லாட்சி, அபிவிருத்தி, குறை, நிறைகள் என்பனவற்றை மக்களுக்குச் சொல்வது பத்திரிகைகளும், இலத்திரனியல் ஊடகங்களும்தான்.

எமது பிரதேசத்தில் ஊடகக் கல்வியைக் கற்றவர்கள் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழ்கிறார்கள். டெனிஷ் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள யாழ். ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் கல்விகற்ற பகுதிநேர, முழுநேர மாணவர்கள் அணிஅணியாக வெளியேறியுள்ளனர்.

டென்மார்க்கின் உதவியுடன் இப்பயிற்சி நெறி எதிர்வரும் 2012ஆம் ஆண்டு வரை செயல் படும். அதன் பின்னரும் செயல்பட வைக்க திட்டங்கள் தயாரிக்கப்படும்.

இதைத்தவிர யாழ்.மாவட்டத்திலுள்ள 3 பாடசாலைகளில் ஊடகக்கல்வி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் 2012ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ சாதாரணதர பரீட்சைக்கு ஊடகக் கல்வியை ஒரு பாடமாக பரீட்சைக்குத் தோற்றுவார்கள்.

இதைவிட யாழ்.பல்கலைக்கழகத்தில் 2008-2009ஆம் கல்வியாண்டில் ஊடகக் கல்விக்கு 35 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இன்னும் 4 வருடத்தின் பின்னர் இவர்கள் பி.ஏ ஊடகக்கல்வி என்ற பட்டத்தைப் பெற்று வெளியேறுவார்கள். இது தவிர ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் தொழில் புரியும் ஊடகவியலாளர்களின் தொழில் ஆற்றல்களை மேம்படுத்தவும் காலத்துக்கு காலம் இடைநிலைப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் இலத்திரனியலின் பயன்பாடுகள் வெகுவாக அதிகரித்துள்ளது மகிழ்ச்சியைத் தருகிறது. இலத்திரனியல் பயன்பாடு தொடர்பாக தொழில் பார்க்கும் ஊடகவியலாளர்களுக்கு பயிற்சிகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

பத்திரிகை செய்தியாளர்களின் நலன் நோக்கிய செயல்பாடு, ஊடகக் கல்வி இரண்டையும் ஊடக வளங்கள் பயிற்சி நிலையம் முன்னெடுத்துச் செல்கிறது.

இந்நிலையத்துக்கான காணியை தந்துதவிய மலாயன் பென்சனியர் சங்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நகரின் இதயப் பகுதியில் இந்நிலையத்திற்கு இடம் கிடைத்தது பெருமகிழ்ச்சியைத் தருகிறது. ஊடக அறிவு, ஆற்றல்களை மேம்படுத்தும் பணியில் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது-என்றார்.

மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராசா, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோரும் உரை யாற்றினார்கள். சங்கத்தின் பொருளாளர் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் வரவேற்புரையையும், செயலாளர் ந.பரமேஸ்வரன் நன்றியுரை யையும் நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்வில் முன்னதாக பயிற்சி நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் அலுவலகத்தை பயிற்சி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை திறந்து வைக்க, ஊடகவியலாளர்கள் 12 பேரின் உருவப்படங்களை ஈழநாடு முன்னாள் ஆசி ரியர் எஸ்.பெருமாள் திரைநீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து அவர்களின் உருவப் படங்களுக்கு நிகழ்வில் சமுகமளித்தோர் மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து இடம்பெற்ற அரங்க நிகழ்வில் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக ஊடக புகைப்படப் பிடிப்பாளராக இருந்து வரும் மூத்த புகைப்படக் கலைஞர் எஸ்.கதிரவேலுவுக்கு வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் சார்பில் சி.வீ.கே.சிவஞானம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து பொற்கிழி வழங்கினார்.

அதன் பின்னர் ஏனையோரும் பொன்னாடை போர்த்தி மலர் மாலைகள் அணிவித்து அவரைக் கௌரவித்தனர். வில்லிசைக் கலைஞர் இராசையா ஸ்ரீதரன் வாழ்த்துப்பா பாடி வாழ்த்து மடலைக் கையளித்தார். (203-236-111-86)

# போரை நிறுத்தி உயிர்களைக் காக்க சர்வதேச நாடுகள் முன்வர வேண்டும்

## கோருகிறார் நடேசன்

கொழும்பு, மே 4

எந்த நாடுகளுக்காவது இங்கு வாழும் மக்கள் மீது அக்கறை இருக்குமானால், மனித உயிர்களைக் காப்பதற்காக, அந்த நாடுகள் தமது ராஜதந்திர வரம்புகளை கடந்து சென்று சிறிலங்காவின் இன அழிப்புப் போரை நிறுத்த நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக 'அசோசியேட்டிறஸ்' செய்தி நிறுவனத்தின் கொழும்பு பிரதி நிதி ரவி நெஸ்மன் மேலும் எழுதியிருப்பதாவது:

நாங்கள் சரணடைவது என்ற பேச்சுக்கே இடமில்லை; அதனால், அனைத்துலக சமூகம் இந்த கொடுமையான போரை நிறுத்துவதற்கு முன்வரவேண்டும், என நடேசன் தெரிவித்துள்ளார். போரை நிறுத்துமாறு உலக நாடுகள் போடும் இராஜதந்திர அழுத்தங்களை எல்லாம் சிறிலங்கா அரசு புறம் தள்ளி வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த 26 ஆம் திகதி ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தம் ஒன்றை அறிவித்திருந்தனர். ஆனால் சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளை சரணடையக் கோரியிருந்தது.

இதற்கு பதிலளித்த நடேசன், சரணடைவது மற்றும் ஆயுதங்களைக் கீழே போடுவது என்ற கேள்விகளுக்கே இங்கு இடம் இல்லை. எமது (மக்களின்) நியாயமான அரசியல் உரிமைகளை நாம் பெறும் வரையிலும் எமது போராட்டம் தொடரும் எனத் தெவித்துள்ளார்.

சிறிலங்கா அரசும், அனைத்துலக மனித உரிமை அமைப்புக்களும் விடுதலைப் புலிகள் மக்களை [illegible] பயன்படுத்துவதாகத் தெவித்த கருத்துக்களை மறுத்த நடேசன், நாம் எல்லோரும் ஒரே குடும்பத்தை போன்றவர்கள் யாராவது தமது குடும்ப உறுப்பினர்களையே மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துவார்களா எனக் கேள்வியும் எழுப்பினார்.

விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தினர் நாட்டை விட்டுச் சென்று விட்டார்கள் என்ற கருத்துக்களை மறுத்த நடேசன், தாம் எல்லோரும் நாட்டிலேயே இருந்து போராட்டத்தை முன்னெடுத்து வருவதாகவும் தெவித்துள்ளார்.

(அ-1)

# ஊடகவியலாளர் திஸநாயகத்தின் நிலைபற்றி கவலையை வெளிப்படுத்தினார் ஒபாமா

கொழும்பு, மே 4

அனைத்துலக ரீதியாக ஊடகங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பாகத் தனது கவலையைத் தெரியப்படுத்திய அமெரிக்காவின் அரச தலைவர் பராக் ஒபாமா, சிறிலங்காவில் ஒருவருட காலத்துக்கு மேலாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் ஜே.எஸ்.திசநாயகத்தின் பரிதாபகரமான நிலை தொடர்பாகவும் குறிப்பிட்டார்.

''உலகின் ஒவ்வொரு மூலையிலும் ஊடகவியலாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள் அல்லது துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றார்கள்'' எனக் குறிப்பிட்ட ஒபாமா, ''அஸர்பைஜான் முதல் சிம்பாவே வரையில் மியான்மார் முதல் உஸ்பெக்கிஸ்தான் வரையில் கியூபா முதல் எரித்தியா வரையில் இந்த நிலைமைதான் காணப்படுகின்றது'' எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான சம்பவங்களுக்கான யதார்த்தமான, உதாரணமாக சிறிலங்காவின் ஜே.எஸ். திசநாயகத்தை அல்லது [illegible] மற்றும் கூஜின் ஆகியோரைக் குறிப்பிடலாம் என அனைத்துலக ஊடக சுதந்திரதினம் கடைப்பிடிக்கப்படுவதை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையி லேயே ஒபாமா தெரிவித்திருக்கின்றார்.

''வெளிநாடுகளில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள எமது நாட்டின் சொந்த குடிமக்கள் பற்றியும் நாம் கவனத்தைச் செலுத்துவது அவசியம்'' எனவும் குறிப்பிட்ட அமெரிக்க அரச தலைவர், ''ரொக்ஸானா சபரி ஈரானிலும், இயூனாலீ மற்றும் லூனாலிங் ஆகியோர் வடகொரியாவிலும் சிறைவைக்கப்பட்டுள்ளனர்'' எனச் சுட்டிக் காட்டினார்.

கடந்த வருடம் மார்ச் மாதம் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள திசநாயகத்தின் மீது, அவர் எழுதிய கட்டுரை ஒன்று தொடர்பாகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. எழுதிய கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுக் காக ஒருவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு குறிப்பிட்ட கட்டுரையின் ஆசிரியரை சிறையில் வைத் திருப்பது சிறிலங்காவின் வரலாற்றில் இதுதான் முதல் தடவையாகும். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொத்துவில் காட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகள் 4 பேர் சுட்டுக்கொலை

கொழும்பு, மே4

அம்பாறை பொத்துவில் கோமாரிப் பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் விசேட அதிரடிப் படையினரால் நால்வர் சுட்டுக்கொல்லப்பட்டனர் எனப் படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

அந்தக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் தேடுதல் நடத்திய சமயம் காட்டுக்குள் ஓடிச் செல்ல முற்பட்ட விடுதலைப் புலிகளின் மீதே இத்துப்பாக்கிப்பிரயோம் மேற்கொள்ளப்பட்டது. அதிலேயே அவர்கள் நால்வரும் உயிரிழந்துள்ளனர் எனப் படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

உயிரிழந்த நால்வரிடமும் பெருந் தொகையான வெடிபொருள்கள் மீட்கப்பட்டன என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அந்தக் காட்டுப்பகுதியில் விசேட அதிரடிப்படையினர் தொடர்ச்சியாகத் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. (அ-சி)

## மரண அறிவித்தல்

### சுப்பையா இராமச்சந்திரன்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இராமச்சந்திரன் நேற்று (03.05.2009)ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பூமணியின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான பொன்னர் - நாகம்மா தம்பதியரின் மருமகனும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் துஷ்யா (ஈரப்பெரியகுளம் பிரதேச செயலகம், வவுனியா), கஜன்(சுவிஸ்) காலஞ்சென்ற கிந்துசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அம்பிகாவதி, பத்மநாதன் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் சகுந்தலாதேவி, மகேந்திரன் (டோகா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்புவத்தை,*
*ஏழாலை மேற்கு, ஏழாலை.* (35032)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## நீந்தச் சென்றவர் நீரில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், மே 4

மானிப்பாய், மருதடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள குளத்தில் நேற்றுப் பி.ப.2மணிக்கு நண்பர்களுடன் நீந்தச் சென்றவர் நீரில் மூழ்கி மரணமானார்.

நவாலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த சிவலிங்கம் ஜனோசன் (வயது 17) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார். இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (04-78)

## கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் ஆசிரிய கலாசாலை நடனத்துறை விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவநேசன் அவர்களின் அன்புத் தாயார்.

### திருமதி பூரணம் சுப்பையா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கோப்பாய் ஆசிரிய கலாசாலைக் குடும்பம்.*

## மரண அறிவித்தல்கள்

### செல்வி அக்கினேஸ் இம்மானுவேல்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அக்கினேஸ் இம்மானுவேல் நேற்று (03.05.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இம்மானுவேல்-மரியம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான றோசமுத்து, கிறிஸ்ரினா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று(04.05.2009) திங்கட்கிழமை பி.ப 1 மணியளவில் நாரந்தனை புனித பேதுரு பவுல் ஆலயத்தில் நடைபெற்று திருப்பலி ஒப்புக் கொடுத்த பின் பூதவுடல் நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாரந்தனை தெற்கு,*
*ஊர்காவற்துறை.* (85031)

தகவல்.
பேதுருப்பிள்ளை (மருமகன்).

### தேவசகாயம் அந்தோனிப்பிள்ளை

(D.A. பிள்ளை - டீசல் ராசா)



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் பாஷையூரை வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் அந்தோனிப்பிள்ளை (D.A. பிள்ளை டீசல் ராசா) நேற்று (03.05.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவசகாயம் - அன்னப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் கெலனின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் சாந்தி(கனடா), எலிஸ்ரன் (கனடா), ஜெயந்தி(ஜேர்மனி), அனிஸ்ரன் (கனடா), வசந்தி (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம்பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*59, முதலாம் குறுக்குத்தெரு,*
*பாஷையூர், யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி0212222032* (85029)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

### கந்தையா அரவிந்தநாதன்



சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அரவிந்தநாதன் கடந்த (01.05.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சிவஈஸ்வரி தம்பதியினரின் அன்புப் புதல்வனும், தேவமனோகரியின் அன்புக் கணவரும் இராகுலன் (லண்டன்) அகிமாலினி (கொழும்பு இராமநாதன் இந்துக்கல்லூரி, 2008 A/L மாணவி), சிந்துஜன் (பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, தரம் 11 மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2009) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் சுன்னாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய பொலிஸ்நிலைய வீதி,*
*சுன்னாகம்.* (85025)

தகவல்:
தாய், மனைவி, பிள்ளைகள்


நன்மைகள்

## வேலை வாய்ப்பு



வெளிநாட்டுச் சுற்றுலா



வாகன கடன் வசதி



மோட்டார் சைக்கிள் கடன் வசதி



தனிப்பட்ட கணனி வசதி



கையடக்கத் தொலைபேசி வசதி

இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான

**யூனியன் அஷ்யூரன்ஸ்**

தனது கிளையின் 7 ஆம் வருட பூர்த்தியை முன்னிட்டு யாழ்.மாவட்ட பிராந்திய கிளைக்கு பின்வரும் பதவிகளுக்கு

தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது

### பதவி வெற்றிடங்கள்

- சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் — பதவி -5
- தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் — பதவி -4
- சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி ஆலோசகர் — பதவி -3
- தனிப்பட்டோர் நிதி ஆலோசகர் — பதவி -2
- சிரேஷ்ட முகவர் அபிவிருத்தி முகாமையாளர் — பதவி -9
- முகவர் அபிவிருத்தி முகாமையாளர் — பதவி -8
- உதவி முகவர் அபிவிருத்தி முகாமையாளர் — பதவி -7
- முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் — பதவி -6
- காப்புறுதி ஆலோசகர் — பதவி -1

தகைமை:- ★ க.பொ.த. உயர் தரத்தில் 3 பாடங்களில் சித்தி (ஆகக் குறைந்த தகைமை)
★ காப்புறுதித் துறையில் அல்லது வியாபார மேம்படுத்தலில் முன்னனுபவம் விரும்பத்தக்கது (கட்டாயமல்ல)

நன்மைகள்:- ★ நிரந்தர அடிப்படைச் சம்பளத்துடனான வேலைவாய்ப்பு (பதவி 6,7,8,9)
★ பயிற்சிக் காலத்தின் போது மேலதிக ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

**தகைமையுடன் உங்களிடம் நாம் எதிர்பார்ப்பது?**

- உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
- உங்கள் வெற்றியை நோக்கிப் பணிபுரிவதற்கான ஆர்வம்
- திடசித்தம்

ஏன் தாமதம் தோற்றுங்கள் நேர்முகத் தேர்விற்கு சுய விவரக் கோவையுடன்

நேர்முகத் தேர்வு:- காலம்:- செவ்வாய்க்கிழமை (05.05.2009)
நேரம்:- முற்பகல் 9.30 மணி
இடம்:- யூனியன் அஷ்யூரன்ஸ்
139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

தொடர்புகளுக்கு:- தொ.பே. 021 222 3753, 0773039582 G.சிறீவரதன், அபிவிருத்தி முகாமையாளர்.


## கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்



இராமநாதன் நுண்கலைக்கழக நடனத்துறை வருகை விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவநேசன் அவர்களின் தாயாரும், உதவி விரிவுரையாளர் செல்வி தேவந்தி சிவநேசன் அவர்களின் அன்புப் பேர்த்தியாரும், மறைந்த நாட்டியப் பேராசான் கலைச் செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்களின் துணைவியாருமாகிய

### திருமதி பூரணம் சுப்பையா

அவர்கள் 2009.05.03 ஆம் திகதி இறைபதம் அடைந்துவிட்டார். இவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்விசார், கல்விசாரா ஊழியர்கள்,
நடனத்துறை/சித்திரமும் வடிவமைப்பும் [illegible],
இராமநாதன் நுண்கலைக்கழகம்.

(85627)


குறுகிய காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட கணினி டிப்ளோமா சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு DMI உங்களுக்கு அரிய சந்தர்ப்பத்தை உருவாக்கித்தந்துள்ளது.

விசேட கட்டணச் சலுகை

- Dip. in Computerized Accounting
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Video Production & Multimedia
- Dip. in Desktop Publishing
- Internet and E-mail

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் பதிவுகளுக்கு முந்துங்கள்

புதிய பிரிவுகள்
6/5/2009 9/5/2009
11/5/2009 16/5/2009
10 a.m & 4 p.m

தொழில் புரிவோர் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான
குறுங்கால விசேட பிரிவுகள்

**Diploma in Microsoft Office 2007**

Duration 1 Month
100%
online வகுப்புக்கள்

**DMI COMPUTER EDUCATION**
NO. 113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel: 021-222 4403


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். எல்லைப்புற மோதலில் தலிபான்கள் 29 பேர் பலி

இஸ்லாமாபாத், மே 04

பாகிஸ்தானின் வட-மேற்கு முனை மாகாணத்திலுள்ள மொஹ்மாந் பிராந்தியத்தில் தலிபான் தீவிரவாதிகளுக்கும், இராணுவத்துக்குமிடையே இடம்பெற்ற கடுஞ் சண்டையில், 29 தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். இரு இராணுவச் சிப்பாய்கள் பலியானார்கள் என இராணுவ வட்டாரம் தெரிவித்தது.

சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ள இப்பிராந்தியம், ஆப்கானிஸ்தானின் குணார் மாகாண எல்லையையொட்டி அமைந்துள்ளது. இப்பிராந்தியத்தில் பழங்குடி இன மக்களே செறிந்து வாழ்கிறார்கள். அண்மைக்காலமாக இப்பிராந்தியம் தலிபான்களின் கோட்டையாகத் திகழ்ந்து வருகிறது.

மொஹ்மாந் பிராந்திய இராணுவச் சோதனைச்சாவடி மீது, சனிக்கிழமை அதிகாலை தலிபான் தீவிரவாதிகள் திடீர் தாக்குதலை ஆரம்பித்தார்கள். இராணுவத்தினர் பதில் தாக்குதலைத் தொடங்கினார்கள். இதனால் இரு சாரருக்குமிடையே மூண்ட கடுஞ்சண்டை மூன்று மணித்தியாலங்கள் வரை நீடித்தது என இராணுவப் பேச்சாளர் மேஜர் பஷால் கான் தெரிவித்தார்.

மொஹ்மாந் பிராந்தியத்தில் தலிபான்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 13 தலிபான்கள் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் வட மேற்கு புனர் பகுதியில் பாகிஸ்தான் இராணுவ ஹெலிக்கொப்டர் சனிக்கிழமை மேற்கொண்ட வான்வழித் தாக்குதலில் 16 தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். அத்துடன் இராணுவத்தால் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்த தேசிய நெடுஞ் சாலையொன்றும் மீட்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை மீட்க பாகிஸ்தான் இராணுவம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்நிலையில், வடமேற்கு புனர் பகுதியில் சனிக்கிழமை தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அதேவேளை, தலிபான்களின் ஆக்கிரமிப்பிலிருந்த வட மேற்கு புனர் பகுதியிலுள்ள முக்கிய தேசிய நெடுஞ் சாலையும் மீட்கப்பட்டது. தலிபான்களுடன் நடந்த சண்டையைத் தொடர்ந்து புனர் பகுதியையொட்டிய ஷாங்காவில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

## பக்தாத் பகுதி இராணுவத் ... அமெ. சிப்பாய்கள் இரு...

பக்தாத், மே 04

வட மொசூல் நகருக்குக் கிழக்கே அமைந்துள்ள இராணுவத்தளமொன்றுக்குள், ஈராக்கிய இராணுவச் சீருடையில் புகுந்த ஒருவர், இரு அமெரிக்க சிப்பாய்களைச் சுட்டுக் கொன்றார். இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் மற்றும் மூன்று சிப்பாய்கள் காயமடைந்தார்கள்.

துப்பாக்கிதாரியும் சுட்டுக் கொல்லப்பட்டார் என அமெரிக்க இராணுவம் தெரிவித்தது. எனினும், இதர விவரங்களை அது வெளியிடவில்லை.

இச்சம்பவம் குறித்து, ஈராக்கிய இராணுவம் குறிப்பிடுகையில், "இத்துப்பாக்கிதாரியும் ஒரு சிப்பாய்தான். அத்துடன் மசூதி ஒன்றில் இமாமாகவும் பணிபுரிந்து வந்தவர். இவர் இப்படி நடந்து கொண்டமைக்கான காரணம் தெரியவில்லை" என்றது.

## ஈராக் குர்திஷ் பகுதியில் ஈரானின் ஹெலி தாக்...

பக்தாத், மே 04

ஈரானிய இராணுவ ஹெலிக்கொப்டர்கள் ஈராக்குக்குள் புகுந்து, குர்திஷ் பகுதியிலுள்ள பழங்குடியினர் வாழும் பகுதிகளில் தாக்குதல் நடத்தின. நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இத்தாக்குதல் இடம்பெற்றது. இதில் 3 ஹெலிக்கொப்டர்கள் ஈடுபட்டிருந்தன.

ஈராக்கிலுள்ள குர்திஷ் ப... ...னுக்கு எதிரான குர்திஷ் தீவிர... ...சம் புகுந்துள்ளார்கள். இவர்... ஈரானுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிவிடுகிறார்கள்.

ஈராக்குக்குள் ஈரான் அத்துமீறி நுழைந்து தாக்கி உள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மகாராஷ்டிரா மாநிலத்தில் பன்றி, கோழிகளுக்கு நோய்

மும்பை, மே, 04

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் கடந்த 10 நாள்களில் 1200 பன்றிகள், 500 கோழிகள், 150 ஆடுகள் கண்டுபிடிக்க முடியாத கொடிய நோய் ஒன்றுக்குப் பலியாகியுள்ளன. உலகம் முழுவதும் பன்றிக் காய்ச்சல் பரவி வரும் நிலையில் மகாராஷ்டிராவில் இது பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு மகாராஷ்டிராவில் ஜல்கோன் மாவட்டத்தில் தாகிவாத் என்ற கிராமம் உள்ளது. இங்கு கடந்த 10 நாள்களாக திடீர் திடீரென கூட்டம் கூட்டமாக பன்றிகளும், ஆடுகளும் செத்து விழுந்தன. சனிக்கிழமை வரை அங்கு 1200 பன்றிகளும், 150 ஆடுகளும் இறந்துள்ளன.

அக் கிராமத்துக்கு அருகிலுள்ள கேட்கோன் கிராமத்தில் 500 கோழிகள் காய்ச்சலால் இறந்துள்ளன. மெக்சிகோ, அமெரிக்கா ஆகிய நாடுகள் உட்பட உலகம் முழுமைக்கும் சுமார் 15 நாடுகளில் பன்றிக் காய்ச்சல் பரவியுள்ள நிலையில், பன்றிகளும், ஆடுகளும், கோழிகளும் பலியாகியுள்ளமை மகாராஷ்டிராவைப் பீதிக்குள்ளாக்கியுள்ளது.

இந்த வளர்ப்பு விலங்குகளின் மரணத்துக்கு அகோர வெயில் தான் காரணம் என அம்மாவட்ட சுகாதாரத்துறை அலுவலர் ஸ்ரீசத் கூறியுள்ளார்.

# தலிபான்களின் தாக்குதலில் ஆப்கானில் 5 சிப்பாய்கள் பலி

"கிழக்கு ஆப்கானிஸ்தானிலுள்ள சோதனைச்சாவடியொன்றின் மீது தலிபான் தீவிரவாதிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் கூட்டுப் படையைச் சேர்ந்த ஐந்து சிப்பாய்கள் கொல்லப்பட்டார்கள். ஏழு பேர் காயமடைந்தனர்" என நேட்டோ தலைமையகம் குறிப்பிட்டது.

"பலியான ஐந்து சிப்பாய்களில் ஒருவர் அமெரிக்கர். மற்றும் நால்வர் நேட்டோ தலைமையிலான சர்வதேச பாதுகாப்பு உதவிப் படையைச் சேர்ந்தவர்கள். இந்நால்வரில் இருவர் லத்வீனியர்கள்" என்றும் அது விவரித்தது.

"தலிபான் தீவிரவாதிகள் திரண்டு வந்து சோதனைச்சாவடி மீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள். அவர்கள் ரொக்கெட்டுகள், எறிகுண்டுகள் ஆகியவற்றையும் பயன்படுத்தியுள்ளார்கள். ரொக்கெட் தாக்குதலுக்கு வெடிபொருள் களஞ்சியமொன்று இலக்காகியுள்ளது" என நேட்டோ பெண் பேச்சாளரொருவர் ரொய்ட்டர் செய்திச்சேவைக்குத் தெரிவித்தார்.

# ஈழத் தமிழருக்காக 70 ஆண்டுகள் சிறையிலிருக்கவும் நாங்கள் தயார்!

## அன்புமணி ராமதாஸ் தெரிவிப்பு



சென்னை, மே. 04

இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலையைத் தடுக்க மத்திய - மாநில அரசுகள் தவறிவிட்டன. இலங்கைத் தமிழர்களுக்காக 7 ஆண்டுகள் என்ன 70 ஆண்டுகள் கூட சிறையில் இருக்கத் தயாராக இருக்கிறோம் - என்று டாக்டர் அன்புமணி கூறியுள்ளார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்த வைபவம் ஒன்றில் அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் அ.தி.மு.க. கூட்டணி வெற்றிபெறப் போவது உறுதி. இலங்கைத் தமிழர் பிரச்சினை, கிராமங்களில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்கிறார்கள். ஆனால், இலங்கையில் என்ன நடந்துகொண்டிருக்கிறது? மத்திய - மாநில அரசுகள் என்ன செய்கின்றன. அனைத்தையும் கிராமங்களில் உன்னிப்பாகக் கவத்து கொண்டிருக்கிறார்கள். இதை எல்லாம் பிரசாரத்தின் போது நானே நேரில் உணர்ந்தேன். இலங்கையில் இனப்படுகொலை நடந்து கொண்டிருக்கிறது. இதைத் தடுக்க மத்திய - மாநில அரசுகள் தவறிவிட்டன.

இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளுக்கு இருக்கும் அக்கறை இந்தியாவுக்கு இல்லை. இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் மீது நடத்தப்பட்டுவரும் தாக்குதலைப் பார்த்து அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி துடித்துப் போய்விட்டார். ஆனால், இந்தியா மௌனமாக இருந்து கொண்டிருக்கிறது - என்றார்.

# ஈழத் தமிழர் படுகொலைக் குறும்படம் திரையிட்ட மூவர் பொலிஸாரால் கைது

சென்னை, மே 04

இலங்கைத் தமிழர் படுகொலை குறித்து குறும்படம் திரையிட்ட அ.தி.மு.க., பா.ம.க. நிர்வாகிகள் உட்பட 3 பேரை பொலிஸார் கைதுசெய்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி பா.ம.க. வேட்பாளர் ஏ.கே.மூர்த்தியை ஆதரித்து, பீர்க்கன்காரணை பேரூர் அ.தி.மு.க. சார்பில் தெருமுனைக் கூட்டம் சீனிவாசா நகரில் வெள்ளியன்று நடந்தது. பிரசாரத்தின் போது திடீரென இலங்கையில் இராணுவத்தால் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது போன்ற குறும்படம் திரையிடப்பட்டது.

உடனே குறும்படம் திரையிட்ட சி.டி. மற்றும் கருவிகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

# பிரபாகரனை நெருங்க முடியாது!

## சென்னையில் வைகோ முழக்கம்

தேர்தலில் மக்கள் அளிக்கப் போகும் தீர்ப்பு இந்தியாவின் எதிர்காலத்தையே மாற்றியமைக்கும். பிரபாகரனை நெருங்க முடியாது. புலிகளை யாராலும் அழிக்க முடியாது - என்று வைகோ கூறியுள்ளார்.

இலங்கையில் இன்றும் போர் நடந்து வருகிறது. அங்கு போர் நிறுத்தப்படவில்லை. அப்பாவி மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். இலங்கையில் போரை நிறுத்து என்று இந்தியா வலியுறுத்தியது உண்டா? ஒரு முறை கூடச் சொல்லவில்லை. இந்திய அரசு, இலங்கை அரசிடம் போர் நிறுத்தம் குறித்து பேசினேன் என்று சொல்லட்டும் நான் அரசியலை விட்டே விலகிக் கொள்கிறேன்.

எங்கள் அணி வெற்றி பெற்றால் தனி ஈழம் அமைப்போம் என்று சகோதரி ஜெயலலிதா கூறியிருக்கிறார். அவர் சொன்னால் கண்டிப்பாகச் செய்வார். இலங்கைத் தமிழர்களுக்காக நாங்கள் எத்தனையோ தியாகங்களை செய்திருக்கிறோம். விடுதலைப் புலிகளிடம் நாங்கள் பணம் வாங்குகிறோம் எனக் குற்றம் காட்டியிருக்கிறார்கள் ஈழத்தமிழர்களுக்காகப் பாடு படும் எங்களை பார்த்தா இப்படிச் சொல்வது? - என்றார்.

# நடிகர் பாலாஜியின் உடலுக்கு ஜெயலலிதா, ரஜினி அஞ்சலி



பழம்பெரும் நடிகரும், தயாரிப்பாளருமான கே.பாலாஜி சென்னையில் நேற்றுமுன்தினம் காலமானார். அவருக்கு வயது 74. சென்னை அப்பலோ வைத்தியசாலையில் காலமான அவரது உடல் எழும்பூரில் உள்ள வீட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக உடல் வைக்கப்பட்டுள்ளது. அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா நேற்றுமுன்தினம் இரவில் வந்து அஞ்சலி செலுத்தினார்.

நடிகர் ரஜினிகாந்த் நேற்றுக் காலையில் பாலாஜியின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

நடிகர் பிரபு, ராம்குமார் இருவரும் குடும்பத்துடன் வந்து அஞ்சலி செலுத்தினார்கள். நடிகர் மோகன்லால், நடிகைகள் கே.ஆர். விஜயா, சுகுமாரி ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர். தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் உள்ளிட்ட திரையுலகத்தினர் திரண்டு வந்து கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்கள்.

நடிகர் பாலாஜியின் மனைவி ஆனந்தவல்லி. இவர்களுக்கு சுரேஷ் பாலாஜி என்ற மகனும் சுஜாதா, சுஜித்ரா என்ற 2 மகள்களும் உள்ளனர். சுஜித்ரா பிரபல மலையாள நடிகர் மோகன்லாலின் மனைவி ஆவார்.

கேரளாவை பூர்வீகமாக கொண்டவர் பாலாஜி. இவர் 'படித்தால் மட்டும் போதுமா', 'விடிவெள்ளி', 'பலே பாண்டியா', 'ராஜா', 'நீதி', 'பில்லா' உட்பட 54 படங்களைச் சொந்தமாக தயாரித்துள்ளார்.

# தமிழகத்தின் உரிமைகளை தாரைவார்த்தவர் கருணாநிதி

## விஜயகாந் குற்றச்சாட்டு

திருவொற்றியூர், மே 04

ஆட்சியில் இருந்த போதெல்லாம் தமிழகத்தின் அனைத்து உரிமைகளையும் தாரை வார்த்தவர் கருணாநிதி - என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந் குற்றம்சாட்டியுள்ளார்.

திருவொற்றியூரில் வெள்ளிக்கிழமை நடந்த பொதுக் கூட்டத்தில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு -

அண்ணாவுக்குப் பின்னர் தி.மு.கவும், எம்.ஜி.ஆருக்குப் பின்னர் அ.தி.மு.கவும் தில்லு முல்லு கட்சிகளாக மாறிவிட்டன.

முதல்வராக கருணாநிதி இருந்தபோது கச்சதீவு இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்டது. காவிரி நீரைப் பெறுவதற்கான வழக்குத் திரும்ப பெறப்பட்டது. இதுபோல் தமிழகத்தின் பெரும்பாலான உரிமைகளைத் தாரைவார்த் தவர் கருணாநிதிதான். தே.மு.தி.க வேட்பாளர் களை வெற்றி பெறச் செய்தால் தமிழகத்தின் உரிமைகளுக்காகப் போராடுவோம் - என்றார்.

# ஜூலை 12இல் மீனா திருமணம்!



பெங்களூரில் வசிக்கும் கணனிப் பொறியியலாளர் வித்தியாசாகர் என்பவரை ஜூலை மாதம் 12ஆம் திகதி கரம் பற்றுகிறார். முன்னாள் நடிகை ராஜ்மல்லிகா, துரைராஜ் தம்பதியர் மகள் மீனா. இவர் 'நெஞ்சங்கள்' படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானார்.

ரஜினியுடன் நடித்த 'அன்புள்ள ரஜினிகாந்த்' படம் அவரைப் பிரபலமாக்கியது. தொடர்ந்து தமிழ், தெலுங்குப் படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்தார். பின்னர் 'ஒரு புதிய கதை', 'இதய ஊஞ்சல் படங்களில் கதாநாயகியாக நடித்த மீனா, ராஜ்கிரண் ஜோடியாக நடித்த 'என் ராசாவின் மனசிலே' படம் மூலம் வெற்றிகரமான கதாநாயகியாக மாறினார். தொடர்ந்து ரஜினி ஜோடியாக 'எஜமான்' படத்தில் நடித்து, முன்னணி நடிகைகளில் ஒருவரானார்.

தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னடம் ஆகிய 5 மொழிகளில் 150 படங்கள் நடித்தார். அனைத்து மொழி முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்த மீனா, தமிழக அரசின் கலைமாமணி விருது, ஆந்திர அரசின் நந்தி விருது உட்பட ஏராளமான விருதுகள் பெற்றுள்ளார்.

இந்நிலையில் மீனாவுக்கு திருமணம் செய்து வைக்க, அவரது பெற்றோர் மணமகன் தேடி வந்தனர். இப்போது பெங்களூரில் வசிக்கும் கணினிப் பொறியியலாளர் வித் யாசாகர் என்பவரை மீனாவுக்கு தேர்வு செய்துள்ளனர். இவர்கள் திருமணம், ஜூலை 12ஆம் திகதி நடைபெறுகிறது. கடந்த வெள்ளியன்று திருமண நிச்சயதார்த்த விழா ரகசிய மாக நடந்தது என்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு கடன் வழங்குவது குறித்து நாணய நிதியம் இம்மாதம் அறிக்கை

கொழும்பு, மே 04

இலங்கைக்கு கடன் வழங்குவது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் மேற்கொண்ட ஆய்வு தொடர்பான அறிக்கை ஒன்று இந்த மாதம் 20ஆம் திகதி நாணய நிதியத்தின் நிர்வாக சபைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் இலங்கைக்கு அந்நிதியத்தால் வழங்கப்படவுள்ள நிதி உடனடியாக வழங்கப்படும் என்று இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அரசியல் காரணங்களுக்காக இக்கடன் தொகையை வழங்காதிருப்பதற்கு சிலரால் நாணய நிதியத்திடம் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களை நாணய நிதியம் கவனத்தில் எடுக்காது என்றும், இலங்கைக்கு கடன் வழங்கும் நாணய நிதியத்தின் திட்டத்தில் எதுவித மாற்றமும் ஏற்படாது என்றும் பிரதி ஆளுநர் மேலும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-சி)

## புலிகளை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத்தில் முடக்கப்பட்டுள்ளார்கள் என்றும் இராணுவப் பேச்சாளர் ஏ.பி. செய்திச் சேவையிடம் நேற்று மாலை கூறினார்.

இறுதிக்கட்டப் போரைச் சந்தித்து வரும் விடுதலைப் புலிகள் பொது மக்களைப் பாதுகாப்புக் கவசங்களாகத் தொடர்ந்து பயன்படுத்தி வருவதாக இராணுவப் பேச்சாளர் குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை - பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருந்த ஆஸ்பத்திரி மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் விவகாரம் சர்வதேச மட்டத்தில் அக்கறையுள்ள விடயமாக மாறியுள்ளது. போர் நிறுத்தத்தைக் கடைப் பிடிக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க இத் தாக்குதல் சம்பவம் பல வகைகளிலும் வழி சமைத்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் அடர்த்தியாக வாழும் பாதுகாப்பு வலயத்தின் மீது கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்று அரசு உறுதி அளித்த பின்னர் ஆஸ்பத்திரி மீதான தாக்குதல் சர்வதேச மட்டத்தில் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்கள் மத்தியில் பெரும் உணர்வலைகளை ஏற்படுத்தி உள்ளதாக செய்தி ஏஜென்சிகள் தகவல் தெரிவித்துள்ளன. ஆஸ்பத்திரி மீது தாம் ஷெல் தாக்குதல்களை நடத்தவில்லை என்று அரசாங்கம் உடனடியாக மறுப்புத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். (அ-6)

## ஐ.நாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு செல்வதற்கான முயற்சிகள் மீண்டும் தீவிரமாகியுள்ளன.

அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் உட்பட பல நாடுகள் செய்மதிப் படங்கள் குறித்து தீவிரமாக ஆராய்கின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனைத் தொடர்ந்து இதனால் எழக்கூடிய பாதிப்புகளைத் தடுக்கும் நோக்குடன் சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு செய்மதிப் படங்கள் குறித்து தெளிவுபடுத்தும் நடவடிக்கையை மேற்குலக நாடுகள் மேற்கொண்டுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால் இலங்கை அரசுக்கு சர்வதேச நெருக்கடிகளும் அழுத்தங்களும் மேலும் அதிகரித்திருக்கின்றன என்று கூறப்படுகிறது.

இதேவேளை, பாதுகாப்புப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல இந்தப் படங்களின் உண்மைத்தன்மை குறித்து அரசிற்கு சந்தேகமுள்ளதாக தெரிவித்துள்ளதுடன், ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு இது குறித்து இலங்கையால் தெளிவுபடுத்த முடியுமென்றும் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

## அகதிகளைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேடமான, கண்டிப்பான வழி காட்டுதல்கள் இதில் அடங்கியுள்ளன. இலங்கையில் இதனை பின்பற்றுமாறு அரசிடம் தீவிரமாக வலியுறுத்தப்பட்டுள்ளது என ஐ.நா சபையின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கலின் திட்டத்தை தீவிரமாக அரசு பின்பற்ற வேண்டுமென தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகளின் கொழும்பிற்கான பேச்சாளர் கோர்டென் வெயஸ், எதிர்கால உதவிகளுக்கான நிபந்தனையாக இதனை உதவி வழங்கும் சமூகம் முன்வைக்குமா என்பது தெரியவில்லையெனச் சொன்னார்.

இலங்கை அரசு கலின் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சர்வதேச ரீதியில் அதன் கௌரவத்திற்கு உகந்த விடயம். மேலும் உதவி வழங்கும் நாடுகளை திருப்திபடுத்துவதாகவும் இது அமையும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-சி)

## விடுதலைப் புலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களில் பலர் ஏற்கனவே அரசாங்கப் படைகளிடம் சரண் அடைந்துள்ளனர் என்றும் அமைச்சர் சமரசிங்க கூறியுள்ளார்.

அவ்வாறு சரண் அடைந்தவர்களுக்கும் இனிமேல் சரண் அடைவோருக்கும் மன்னிப்பு வழங்கி, புனர்வாழ்வு அளிக்கப்படும். அவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கி சமூகத்துடன் இரண்டறக் கலக்கத் தேவையான வசதிகளை அளிக்கவும் அரசாங்கம் திட்டங்களை வகுத்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித் துள்ளார்.

பாதுகாப்பு வலயத்தில் படையினருக்கு எதிராக மோதலில் ஈடுபட்டுள்ளவர்கள் சரண் அடைந்தாலும் பொது மன்னிப்பு வழங்கப்படும் என்றும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு நீதிமன்றினால் தண்டனை விதிக்கப்படுள்ளவர்களுக்கும் இது பொருந்தாது என்றும் சொல்லப்படுகிறது. (அ)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்திப்பில் ஈ.பி.டி.பி, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளிட்ட பல கட்சிகள் கலந்து கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் ஜனா திபதி அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை ஏற்று சந்திப்பில் கலந்துகொள்வதா, இல்லையா? என்பது குறித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று பிற்பகல் கூடி ஆராய உள்ளனர் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற தமிழ் கட்சிகளின் கூட்டத்துக்கும், ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுத்ததும் அந்தஅழைப்பை கூட்டமைப்பினர் நிராகரித்ததும் தெரிந்தவையே. (அ-1)


ஐடியல் அக்கடமி
சரண்சந்தி, சண்டிலிப்பாய். | நீராவியடி யாழ்.நகர், | அந்தோனியார் கோயில் அருகாமை, மானிப்பாய்.
மூன்று நிறுவனங்களிலும்:
இன்று
பிரிவு - 2
O/L Day Class
04.05.2009 (திங்கள்) 8 AM


# மாணவியின் உடற் பாகங்கள் இரசாயனப் பகுப்பாய்வுக்கு

கொழும்பு, மே 04

மட்டக்களப்பில் கடந்த செவ்வாய்க் கிழமை கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலய மூன்றாம் தர மாணவி சதீஸ்குமார் தனுஷிகாவின் உடல் பகுதிகளை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக் கொலைக் குற்றவாளிகளைக் கைது செய்வதற்காக விசேட பொலிஸ் குழுவொன்று அனுப்பப்பட்டுள்ளது என்றும் இதுவரை இக்கொலை தொடர்பாக சுமார் 20 பேர் வரை விசாரிக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-சி)

## கருணாநிதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளார். காய்ச்சல் அதிகமாக இருந்ததையடுத்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்று கூறப்பட்டது.

தொண்டையில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக முதல்வர் கருணாநிதி இரண்டு நாள்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெறவேண்டியிருப்பதால் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் இரு நாள்களுக்குரத்து செய்யப்படுகின்றன என்று தி.மு.க. பொதுச் செயலர் அன்பழகன் தெரிவித்தார். (அ)

## இலங்கைக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அறிக்கையே பின்னர் ஊடகங்கள் மூலமாக உலகம் முழுவதும் பரவியது.

ஜனவரி மாதத்துக்குப் பின்னர் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல்களில் சுமார் 6ஆயிரத்து 500 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்றும் சுமார் 13 ஆயிரம் பேர் காயமடைந்திருக்கின்றனர் என்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. கடந்த வாரம் கொழும்பு வந்திருந்த பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் இது தொடர்பாகக் கேள்வி எழுப்பியிருந்தார்கள்.

கடந்த வியாழக்கிழமை வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்ட ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி புஹுனேயை, இவ்வாறான புள்ளிவிவரங்கள் சரியானவை என்பதை அவரால் எவ்வாறு உறுதிபடுத்த முடியும் எனக் கேட்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவே இந்தக் கேள்வியை எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த புஹுனே, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் பணிபுரியும் இரண்டு மூத்த அரச மருத்துவர்கள்தான் இந்தத் தகவல் களைத் தனக்குத் தந்தார்கள் எனத் தெரிவித்தார். இதனை ஏற்றுக்கொள்ள மறுத்த ரோஹித போகொல்லாகம, விடுதலைப் புலிகளின் பிடியில் உள்ள பகுதியில் பணிபுரியும் எந்தவொரு அரச அதிகாரியையாவது சுயாதீனமான முறையில் தகவல்களை அனுப்புவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிப்பார்களா என்று பதில் கேள்வி ஒன்றைத் தொடுத்தார் எனவும் தெரிகிறது.

எது எப்படி இருந்தபோதிலும் 6 ஆயிரத்து 500 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்ற தகவல் ஊடகங்களுக்குக் கசிவதற்குக் காரணமாக இருந்தவர் ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி புஹுனேயே தான் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதால் அவரை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என அரச மேல்மட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

இதற்கு முன்னர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளிவிவகார அமைச்சராக இருந்த காலப்பகுதியிலும் ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதிகள் இருவரை அரசு நாட்டை விட்டு வெளியேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (சி)


G.A.Q, B.A
Part - I,II
யாழ்.பேராதனை (பூர்நிட்டல்)
அனைத்துப் பாடங்களும்
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
04.05.2009 திங்கள் 3.p.m
A/L 2011 கலை, வர்த்தகப் பிரிவுகள்
O/L - 2009 Paper class
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.


## நலன்புரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திக்க யாழ். செயலகம் ஏற்பாடு செய்துள்ளது.

இது தொடர்பான விவரங்கள் மற்றும் அவர்களுக்கான தொலைபேசி வசதிகள், அடிப்படை வசதிகள் ஆகியன தொடர்பாக அரச அதிபர் கே.கணேஷ் விடுத்துள்ள அறிக்கை 2 ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.

## வன்னி மக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஏப்ரல் 26 ஆம் திகதி நாங்கள் ஒரு தலைப்பட்சமாக விடுத்த யுத்தநிறுத்த அறிவிப்பு குறித்து இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களது கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இவ்வாறான யுத்த நிறுத்தம் மாத்திரமே தற்போதைய மனிதாபிமான நெருக்கடிகளுக்கான தீர்வாக அமையும் என்பதே எமது நிலைப்பாடு.

யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வருவதற்கான செயற்பாட்டில் பங்குகொள்ளவும், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை காண்பதற்கான பேச்சுகளில் ஈடுபடவும் நாம் தயாராகவுள்ளோம்.

எமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மக்கள் எப்போதும் இந்தப் பகுதியிலேயே வாழ்ந்தவர்கள். இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகளால் பல தடவைகள் இடப்பெயர்வை எதிர்கொண்டவர்கள்.

எமது அமைப்பின் நிர்வாக கட்டமைப்பு உள்ளூர், சர்வதேச மனிதாபிமான அமைப்புகளுடன் இணைந்து மட்டுப்படுத்தப்பட்ட உதவிகளை இந்த மக்களுக்காக வழங்கியுள்ளது.

எனினும், துரதிஷ்டவசமாக மனிதாபிமான அமைப்புகள் வெளியேற்றப்பட்ட பின்னர் இந்த மக்கள் மேலும் கடினமான துயரங்களை - நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் தஞ்சமடைந்துள்ள மக்களின் நிலைமைகளை தானே மதிப்பிடக்கூடிய சர்வதேச கண்காணிப்புக் குழுவொன்று அவசியமென நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம்.

இலங்கை அரசின் கொள்கைகளை கருத்திற்கொள்ளும்போது, அரசு தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஏற்றுக் கொள்வதற்கு தானாக முன்வரும் என நம்புவதற்கு இடமுமில்லை.

1948 இல் பிரிட்டன் வெளியேறிய பின்னர், கடந்த 60 வருடங்களில் தமிழ் மக்கள் கற்றுக்கொண்ட பாடம் இதுவாக உள்ளது.

தற்போது நடைபெறும் மோதல் தமிழ் மக்களின் பிரத்தியேக தனித்துவ அடையாளங்களை அழிக்கும் முயற்சியென நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

இவ்வாறான நிலைமையிலேயே நாங்கள் எங்களது போராட்டத்திற்கான சர்வதேச சமூகத்தின் ஆதரவை - அங்கீகாரத்தை கோருகிறோம்.

இராணுவ வழிமுறைகள் மூலமாக இறுதித் தீர்வைத் திணிப்பது என்ற இலக்கை தொடர்வதற்கு இலங்கை அரசிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், அது பிராந்தியத்தையே ஸ்திரமின்மைக்கு இட்டுச்செல்லும் என்பதில் சந்தேகமேயில்லை.

இலங்கையின் மோதல் பிராந்திய ரீதியிலான பரந்துபட்ட அதிர்வுகளை உருவாக்கும் என்ற உங்களது மதிப்பீட்டை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)


CHEMISTRY => S.Vasu
A/L 2010
Organic
ஆரம்பம்
05.05.2009
Tue 4 p.m.
NEC
Clock Tower Road, Jaffna







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.